புதுக்குடியன்

PATHUKAVALAN

மலர் 114 இதழ் 14 17-6-1988 (யூன்17-யூன்24) பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

LIBRARY OF JAFFNA CATHOLIC DIOCESE RECEIVED 0-6-1988 MAIN LIBRARY

109 ஆயரவைகள்

1989 ஒக்ரோபர் 5முதல் 8வரை கொரியாவின் தலை நகர் சோலில் நடைபெற வுள்ள சர்வதேச நற்கருணை மகாநாட்டில்பங்குகொள்ள விருப்பதாக 60 தேசிய ஆயரவைகள் இதுவரை அறிவித்துள்ளன. உலகிலுள்ள 109 கத்தோலிக்க ஆயரவைகளுக்கும் இம் மகாநாட்டில் கலந்துகொள்ள அழைப்பு விடப்பட்டிருந்தது. இம்மகாநாட்டிற்கு முனனேடியாக தேசிய நற்கருணை மகாநாடு கொரியாவில் இவ்வாண்டு ஒக்ரோபர்16ல்நடைபெறும்

1971இல் பிதா சந்திரா

பிதா சந்திராவின் கொலையைக் கண்டித்து ஆனி30 யாழ்.நகரில் இரங்கல் திருப்பலி

நீதிக்காகவும், சமாதானத்துக்காகவும், மக்களின் சுதந்திரத்திற்காகவும் தன்னை அர்ப்பணித்த அருள்திரு. சந்திரா பெர்ணண்டோவின் கொலையை வன்மையாகக் கண்டித்துள்ள யாழ் மறைவட்ட ஆயரும், குருக்களும் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஒன்றுகூடி இரங்கல் திருப்பலியில் பங்கு கொள்ளவுள்ளனர். மறைவட்டாரங்களிலும், பங்குகளிலும் இத்தகைய வழிபாட்டு முயற்சியில் ஈடுபடும்படி யாழ். மனித முன்னேற்ற நடுநிலையம், அருட்தந்தையரைக் கேட்டுக் கொள்கிறது. பேராலயத் திருப்பலியில் பல குருக்களும் பெருந்திரளான மக்களும் பங்கு கொள்ளுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அருள்திரு சந்திரா பெர்ணண்டோவின் கொலை, காலத்தின் அறிகுறி என்கிறார் மட்டுநகர் ஆயர்

நாட்டில் சமாதானத்தை மீண்டும் கொண்டுவர அரசு, போராளிகளுடன் உடன்பட வேண்டும்

"நிலைமை, சாதாரண நிலைக்கு வெகு தொலைவில் உள்ளது" எனக் குறிப்பிட்ட ஆயர், "சகல கட்சிகளும் இந்திய, இலங்கை அரசுகளும் போராளிகளும், படையினரும், இலங்கை இனப்பிரச்சினையை மீளாய்வு செய்து நாட்டில் சமாதானத்தை மீண்டும் கொண்டுவர உடன்பட்டு நடைமுறைச் சாத்தியமான செயல்களில் ஈடுபடவேண்டும்" எனக் கேட்டுள்ளார்.

மட்டுநகர் பிரஜைகள் குழுத் தலைவரும், பேராலயப் பங்குத் தந்தையுமான அருள்திரு சந்திரா பெர்ணண்டோ அடிகளின் கொலையைப் பற்றி செய்திவெளியிட்டுள்ள UCAN ஆனி 8 செய்தி இதழ், திரு மலை மட்டுநகர் ஆயர் பேரருள் திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் "இதுவே காலத்தின் அறிகுறி" என்று கூறியுள்ளதாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, "மூன்று ஆயுதம் தாங்கிய கொரில்லாக்கள் ஆனி 6ஆம் திகதி பங்கு மனைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து 46 வயதான குருவைச் சுட்டுக் கொன்றனர். இக்கொலையை வன்மையாகக் கண்டித்த ஆயர், இழக்குக்கரையின் அவல நிலையைப்பற்றிக் கவலை தெரிவித்தார்.

"நிலைமை சாதாரண சூழ் நிலைக்கு வெகு தொலைவில் உள்ளது" எனக் குறிப்பிட்டு "நடைமுறைச் சாத்தியமான செயல்களின்மூலம் சமாதானத்தைக் கொண்டுவர உடனடியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று ஆயர் கேட்டுக்கொண்டார்.

ஆசியாவுக்கு 3 புதிய கருதினல்கள்

திருத்தந்தையால் வைகாசி 29ம் திகதி அறிவிக்கப்பட்ட 25 கருதினல்களில் மூவர் ஆசியர்கள். மூவர் ஆபிரிக்கர்கள். இவர்கள் இம்மாதம் 28ஆம் திகதி தமது சிவப்புத் தொப்பியைப் பெற்றுக்கொள்ளும் சடங்கில் கலந்துகொள்ள வத்திக்கான் செல்கின்றனர்.

இந்தியாவிற்கு இரு கருதினல்களும் சீனவுக்கு ஒருவருமாக ஆசியா மூன்று கருதினல்மாரைப் புதிதாகப் பெற்றுள்ளது. பம்பாய் பேராயர் மேதகு சைமன் பிமென்ரா ஆண்டகையும் கேரளத்தைச் சேர்ந்த எர்ணக்குளம் பேராயர் மேதகு அன்ரனி படியேரா ஆண்டகையும் கருதினல்களாகத் தெரியப்பட்டுள்ள இந்திய ஆயர்களாவர். இந்தியா ஏற்கனவே நான்கு கருதினல்களைப் பெற்றது. இவர்களில் இருவர் இறந்துவிட்டனர். மற்ற இருவர் கருதினல் சைமன் லூர்துசாமி ஆண்டகையும், இளைப்பாறிய பேராயர் கருதினல் லோறன்ஸ் பிக்காச்சியும்ஆவர். இறந்தவர்கள் பம்பாய் கருதினல் வலேரியன் கிருசியஸ், எர்ணக்குலம் கருதினல் யோசப் பரக்காட்டில் ஆகிய இருவருமாவர்.

இலங்கைக்கு இதுவரை தரப்பட்ட ஒரே ஒருவர், கருதினல் கூறே ஆண்டகை அவர்களே. இவர் இளைப்பாறிய பின் இப்போது தேவத்தையில் வாழ்கிறார்.

ஆடி 2 மடுத்திருவிழா

இவ்வாண்டு மடுத்திருப்பதியில் ஆடித் திருவிழா நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. யாத்திரிகர்களின் வசதிக்காக, தேவையான ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன வென்று மடுத்திருப்பதியின் பரிபாலகர் அருள்திரு சூசைதாசன் குறூஸ் அ. ம. தி. அடிகளார் அறிவித்துள்ளார். 23ஆம் திகதி நவநாள் ஆரம்பமாகின்றது.

கருதினல் வூ செங்-சுங்

வத்திக்கான் அதிகாரத்தை அங்கீகரிக்காத சீனத் திருச்சபையை மீண்டும் வத்திக்கானுடன் இணைக்கும் பாலமாகச் செயற்பட சீனவைப் பிறப்பிடமாகக்கொண்டஆயர் மேதகு யோண் பப்றிஸ்ட் வூ செங்-சுங் புதிய கருதினலாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

சீனவிலிருந்து 1949இல் வெளியேறி ஹொங்-கொங்கில் வாழ்ந்த இவர் 1952இல் குருவாகி 1956இல் உரோமில் கலாநிதிப்பட்டம் பெற்றார். 1985இல் சீன அரசு இவரை அழைத்தபோது இவர் தன் தாயகம் சென்று 40 ஆண்டுகளுக்குப்பின் தன் பெற்றோரைக் காணும் பாக்கியம் பெற்றார்.

ஹொங்-கொங்கின் முதலாவது கருதினலான இவர் 270,000 கத்தோலிக்கரின் ஆயராவார். 1997இல் ஹொங்-ஹொங் சீனவுடன் இணைகிறது.

அமெரிக்க குருவின் கொலைபற்றிய விசாரணை

பிலிப்பைனில் கொலையுண்ட அமெரிக்க குருவான பிதா கார்ல்ஸ்மிற்ஸின் கொலை பற்றிய விசாரணையை மணிலாவிலுள்ள ஐக்கிய அமெரிக்க தூதரகம் கவனித்து வருகின்றது. இக்கொலையை மூடி மறைக்க இராணுவம் முயன்றபோது துறவற சபை அதிபர், சிக்காகோ கருதினல் பேர்ணடினின் உதவியைக் கேட்டதன் பேரிலேயே அமெரிக்க தூதரகம் இதனைச் செய்கின்றது.

எழுபது வயதான பிதா ஸ்மிற்ஸ் பிளான் பூர்வகுடியினர் மத்தியில் பணிபுரிந்து வந்தார். இவர் ஏப்ரல் 7-ம் திகதி சாயில் மண்டே என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். மண்டேயின் மனைவிக்கு ஆசிரியவேலை கொடுக்க மறுத்தமையினாலே அவன் ஆத்திரமடைந்து அவரைத் துப்பாக்கியால் சுட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அனைத்தும் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

நிரந்தத் தீர்வு

திம்புப் பேச்சு வார்த்தையில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களே தமிழ்மக்களின் பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வைத் தரவல்லன என்ற தீர்மானத்தை லண்டனில் கூடிய சர்வதேச தமிழர் ஒன்றியம் முன் வைத்துள்ளது.

இதன் அடிப்படையிலேயே விடுதலைப்புலிகளும் இலங்கை - இந்திய உடன்படிக்கையில் திருப்திப்படவில்லை என்றும் போராட்டத்தை நிறுத்தி, பேச்சு வார்த்தையில் ஈடுபட்டால் இணக்கம் காண முடியும் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை - இந்திய உடன்படிக்கை பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் தரப்பட்ட நன்மைகளைக் கூட நமக்குத்தரவில்லை என்று அங்கு கருத்துப் பரிமாறியவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். குடியேற்றப் பிரச்சினை மாகாண சபைகளுக்கு அப்பாற்பட்டவையாதலால் சிங்களக் குடியேறறங்கள் தொடரவும், தமிழ் இன அழிப்புத்தொடரவும் இது வழி வகுக்கிறது என்கிறார்கள்.

இலங்கை அரசியல் யாப்பில் தமிழ் அரச கரும மொழி என்ற தருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இந்திய அரசின் வற்புறுத்தலால் இந்த மாற்றங்கள் இன்று மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இவை பேச்சளவில் மட்டும் தான். செயலளவில் இவை நடைமுறைச் சாத்தியம் அற்றவை. இலங்கை அரசை நம்பி இவறறை ஏற்றுக்கொண்டு இத்தனை காலப் போராட்டத்தையும், வேதனைகளையும், துன்பங்களையும், அழிவுகளையும் விலைபேச முடியுமா என்பதே ஒப்பந்தத்தில் திருப்தி அற்றவர்களின் நிலைப்பாடு.

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராட முன் வந்த அத்தனை குழுக்களும், தமிழ்த் தேசிய இனம் பூரண சுதந்திரத்துடன் இந்நாட்டில், உரிமையுள்ள பிரஜைகளாக வாழவேண்டும் என்ற நோக்கத்துக்காகவே மாற்று வழியின்றி ஆயுதம் ஏந்தினர். இந்திய அரசில் நம்பிகை வைத்து எல்லோரும் ஆயுதங்களை ஒப்படைக்க முன் வந்தனர். ஒப்பந்தத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி, சிங்களக் குடியேற்றங்களை இலங்கை அரசு மும்முரமாக மேற்கொண்டதால் தாயகத்தை மீட்க விடுதலைப்புலிகள் மீண்டும் ஆயுதம் ஏந்தினர். மீண்டும் தடைசெய்யப்பட்ட இயக்கமாக இந்தியப் படையின தாக்குதலுக்கு ஆளாகினர்.

அவர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்தியதற்கு அடிப்படைக் காரணம் சிங்களக் குடியேற்றமே. சிங்களக் குடியேற்றம நடைபெற்றது என்பதை இந்திய அரசும் ஏற்றுகொண்டது. எனவே அக்குறை நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

இல்லையேல், அரைகுறைத் தீர்வை நமக்குத் தந்துவிட்டு இந்தியப்படை தாயகம் திரும்பிவிட, தமிழர்கள் மீண்டும விரட்டப்படுகிறவர்களாக, தொடர்ந்து அகதிகளாக ஓடிச் செல்ல நேரிடும்.

இந்திய அரசு, விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்ததை நடத்துவது, புலிகளுக்கு ஆளும் அதிகாரம் கொடுப்பதற்காக அல்ல. மாறுக, தமிழர் உரிமைகளை உறுதிபடுத்துவதற்காக.

அதிகார வெறிபிடித்தவர்களாக, புலிகள் ஆள நினைக்கிறார்கள் என்ற நாமத்தை தமிழ் மக்கள் அவர்கள் மேல சுமத்துவது தமது முகத்தில் சேற்றைப்பூசிக் கொள்வதற்குச் சமமானது.

புலிகள் தவறிழைத்துள்ளனர். கொடிய செயல்களைச் செய்துளளனர். பல கண்டிக்கத்தக்க செயல்களில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அடிப்படையில் அவர்களது நோக்கம, தமிழ் மக்கள் மீண்டும் ஒரு முறை தம இனத்தைக் காக்க உரிமைப் போராட்டத்தில் இறங்காத வகையில் ஒரு நிரந்தரத் தீர்வை இந்திய அரசின் உதவியுடன் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதேயாகும்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு நிரந்தரத் தீர்வை தமிழ மக்களுக்கு விட்டுச் செல்ல பேச்சுவார்தையே ஒரே வழி.

"புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவில் நல்ல பிற."

"மீட்பரின் அன்னை"

திருத்தந்தையின் சுற்றுமடல் (19)

இறையூக்கம் பெற்ற விசுவாச அறிக்கை

இந்த இரண்டு பேறுகளும் மீட்பர் பிறப்பின் அறிவிப்பை நேரடியாகக் குறிக்கின்றன. ஒப்போது எலிசபெத்தம்மாளைச் சந்திக்கையில் எலிசபெத்தம்மாளுடைய வாழ்த்து அந்த உச்சநிலைக்குச் சான்று பகர்கையில் மரியாளின் விசுவாசம் ஒரு புதிய உணர்வையும். ஒரு புதிய வெளிப்பாட்டையும் பெறுகிறது. மீட்பர் பிறப்பின் அறிவிப்பின்போது "விசுவாசத்தின் கீழ்ப்படிவின்" ஆழத்தில் மறைந்திருந்தது. இப்போது பரிசுத்த ஆவியின் தெளிவான, உயிரளிக்கும் திக் கொழுந்துபோல் பொங்கி எழுகின்றதெனக் கூறலாம். எலிசபெத்தம்மாளின் வீட்டுவாயிலில் மரியாள் கூறும் வார்த்தைகள் இறையூக்கம் பெற்ற விசுவாச அறிக்கை ஆகும். இதிலே, வெளிப்படுத்தப்பட்ட இறைவார்த்தைக்கு இறைவனை நோக்கிபக்தியார்வமும் கவிதா நயமும் நிறைந்த அக்களிப்புடன், அவள் தன் முழு உள்ளத்தோடும் அளிக்கும் மறுமொழி காணப்படுகின்றது. மிகவும் எளிமையானவையும், அதே சமயத்தில் இஸ்ராயேல் மக்களின் புனித நூல்களினுல் ஊக்குவிக்கப்பட்டவையுமான இந்த உன்னத வார்த்தைகளில் மரியாளின் சொந்த அனுபவமும், அவளது உள்ளத்தின் பரவசமும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன. அவற்றிலே இறைவன் என்னும் மறைபொருளின் ஓர் ஒளிக்கதிரும், வார்த்தைகளிலடங்கா அவரது பரிசுத்த தனத்தின் மகிமையும், மாற்ற முடியாத கொடையாக மனித வரலாற்றில் பிரவேசிக்கும் நித்திய அன்பும் ஒளிவீசுகின்றன.

இறைவனின் இந்தப் புதிய வெளிப்படுததலில், புதிதாக இறைவன் "தம்மையே அளிக்கும்" செயலில் முதன்முதல் பங்குகொண்டவள் மரியாள். ஆகவே "ஏனெனில் வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும் செயல் பல புரிந்தார். அவர் பெயர் புனிதமானதே" எனக் கூறுகின்றாள். அவளது வார்த்தைகளில் பிரதிபலிக்கும் ஆன்மீக ஆனந்தத்தை வார்த்தைகளால் எடுத்துரைப்பது கடினம். என் மீட்பராம் கடவுளில் நிலைந்து என் இதயம் களிகூருகின்றது" உண்மையில் "இறைவனையும் மனித மீட்பையும் பற்றிய ஆழ்ந்த உண்மை இறிஸ்துவில் நமக்காகச் சுடர்விட்டு ஒளிர்கிறது. இக்கிறிஸ்துவே இணைப்பாளரும் வெளிப்பாட்டினத்தின் முழுமையுமாவார் (இ. வெ. 2) மரியாள் தனது அக்களிப்பில், கிறிஸ்துவின் முழுமையினது மையத்தில் தான் இருப்பதாக ஒப்புக்கொள்கிறாள். முன்னேருக்கு, முதன்முதலில் "ஆபிரகாமுக்கும் அவர் வழிவந்தோருக்கும் அளிக்கப்பட்ட வாக்குறுதி தன்னிலே நிறைவு பெறுவதை உணர்கிறாள். கிறிஸ்துவின் தாய் என்ற வகையில் தமது இரக்கத்தை மறவாது, காலம் காலமாகத் தம்மை வெளிப்படுத்திய உடன்படிக்கையின் இறைவனது மீட்புத்திட்டம் முழுவதுமே தன்னுள் அடங்கியுள்ளமையை அவள் உணர்ந்திருக்கின்றாள்.

பொய்களின் தந்தையானவன் விதைத்த சந்தேகம் பெயர்த்தெறியப்பட்டது

37. ஆதிதொட்டே இறையன்னையை முன் மாதிரியாகக் கொண்டு தனது உலகப் பயணத்தை அமைத்துக் கொண்ட திருச்சபையானது அவளைப் பின் பற்றி எப்போதும் இப் புகழ்ப் பாடலின் வார்த்தைகளை உச்சரிக்கின்றது. மீட்பர் பிறப்பின் அறிவிப்பின் போதும் எலிசபெத்தைத் தரிசித்த போதும் மரியாள் காட்டிய விசுவாசத்தின் ஆழத்திலிருந்து உடன்படிக்கையின் இறைவனைப் பற்றிய உண்மையை திருச்சபை பெற்றுக்கொள்கிறது. இவரே வல்லபம் மிக்கவர், மனிதனுக்காக "அரும் பெரும் செயல் பல" புரிபவர், "அவர் பெயர் புனிதமானது" உலகிலே மனிதவரலாற்றின் ஆரம்பத்திலே காணப்படும் பாவமானது, இறைவனில் "விசுவாசமின்மை" என்ற இந்தப் பாவமானது, மரியாளின் புகழ்ப்பாடலில் பெயர்த்தெறியப்படுவதை திருச்சபை காண்கிறது. முதற் பெண்ணான ஏவாளின் இதயத்தில் "பொய்களின் தந்தையானவன்" விதைத்த "சந்தேகத்துக்கு" மாறுக, "புதிய ஏவாள் என்றும்" "உயிர் வாழ்வோரின் அன்னை" என்றும் பாரம்பரியமாய் அழைக்கப்படும் மரியாள், இறைவனைப் பற்றிய மங்கா உண்மையை, ஆதியிலிருந்து சகல கொடைகளுக்கும் ஊற்றுகிய, தனக்கும் பிரபஞ்சம் அனைத்திற்கும் "அரும் பெரும் செயல் பல புரிந்த" பரிசுத்தமும் வல்லபமும் மிக்க இறைவனைப் பற்றிய தெளிவான உண்மையை துணிச்சலுடன் பறைசாற்றுகிறாள். படைக்கும் செயலில் இறைவன் யாவற்றுக்கும் இருத்தலளிக்கிறார். மனிதனைப் படைக்கும்போது, ஏனைய உலக பிராணிகளோடு ஒப்பிடுகையில் ஒரு விசேட விதத்தில் தமது சாயலும் பாவனையுமான ஒரு மகத்துவத்தை அவனுக்கு அளிக்கிறார். மேலும். அளிக்கும் ஆவலில், மனிதனுடைய பாவத்தையும் பொருட்படுத்தாது திருமகனில் தம்மையே அளிக்கின்றார். "தம் ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்" (அரு. 3:16). மரியாள் தனது திருக்குமாரன் தமது செயல்கள் போதனைகள் மூலமும், திட்டவட்டமாகத் தமது சிலுவை மரணம், உயிர்ப்பு ஆகியவற்றின் மூலமும் முழுமையாக நிறைவேற்றப் போகும் இந்த அற்புதமான உண்மைக்கு முதல் சாட்சியாக இருக்கின்றாள்.

கஷ்டதுன்பங்கள் மத்தியிலும் மரியாளோடு இப்புகழ்ப் பாடலை ஓயாது ஒதிக்கொண்டிருக்கும் திருச்சபை, அவ்வேளையில் வியக்கத்தக்க எளிமையுடன் எடுத்துரைக்கப்பட்ட இறையுண்மையின் ஆற்றலால் வலுவூட்டப்படுகிறது. அதே வேளையல் இறைவனைப் பற்றிய இந்த உண்மையின் வழியாக, மனிதனின் இவ்வுலக வாழ்வு என்னும் கடினமான, சிலவேளைகளில் சிக்கலான பாதையின் மீது ஒளிபரப்பத் திருச்சபை விரும்புகிறது. ஆகவே, கிறிஸ்தவ சகாப்தத்தின இரண்டாயிரம் ஆண்டு முடிவில், திருச்சபையின் பயணமானது அதன் பணியின் மட்டில் ஒரு புதிய அர்ப்பணத்தையும் கொண்டிருக்க வேண்டியுள்ளது. எளியோர்க்கு நற்செய்தி சொல்ல என்னை அபிஷேகம் செய்துள்ளார்" (லூக். 4 : 18) எனத் தன்னைப் பற்றிக் கூறியவரைப் பின்பற்றி திருச்சபை தலைமுறை தலைமுறையாக இன்று வரை அதே பணியை நிறைவேற்ற முனைந்துள்ளது.

சுதந்திரம், விடுதலை-கிறிஸ்தவ அர்த்தம்

திருச்சபை ஏழைகளைச் சிறப்பாக விரும்பியுள்ளமை மரியாளின் புகழ்ப் பாடலில் அற்புதமான விதத்தில் பொறிக்கபபட்டுள்ளது. நசரேத்தூர்க் கன்னி தன் ஆன்மாவின் அக்களிப்பில் கொண்டாடிய அதே உடன்படிக்கையின் இறைவன் தான் "வலியோரை அரியணையினின்று அகற்றினர். தாழ்ந்தோரை உயர்த்தினர். பசித்தோரை நலன்களால் நிரப்பினர். செல்வரை வெறுங்கையராய் அனுப்பினர். நெஞ்சிலே செருக்குற்றவர்களைச் சிதறடித்தார். அவர் தம் இரக்கம் அவரை அஞ்சுவோர்க்குத் தலைமுறை தலைமுறையாய் உளதாமே" சங்கீதங்களில், இறைவனிடம் முழு நம்பிக்கை வைத்து, அவரிடமிருந்து தமது மீட்புக்காகக் காத்திருந்த "யாவேயின் ஏழைகளது" மனப்பான்மையில் மரியாள் ஆழமாக ஊறியிருந்தாள். ஏழைகளினது மெசியாவின் வருகையை மரியாள் உண்மையில் பறை சாற்றுகின்றாள் (இசா. 11: 4; 61: 1.)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆர்க்" உடன்படிக்கையின் பேழை

பிறப்பிலேயே விவேகக் குறைபாடு. அல்லது, பிறப்பின் பின்பு நோய்களின் தாக்கத்தால் விவேகக் குறைபாடு, இதனால் உடல் உளத்தாக்கங்களால் சீரான வளர்ச்சி, செயற்பாடுகள் குன்றியுள்ள மாசற்ற சிறுவர்களை அன்புக் கரிசனையுடன் பராமரித்து, அவரவர் குறைகட்கு ஏற்ப சிகிச்சையும், பாதிப்படைந்த உடல் உறுப்புக்களின் செயற்பாட்டுக்குப் பல்வேறு பயிற்சிகளிலும் சிறுவர்களை ஈடுபடவைத்து. ஓரளவு அறிவு, செயற்திறன், அகியவற்றை மேம்படுத்துவதற்காக இயங்கும் ஓர் உன்னத இல்லம் இலைமறை காய் போல் உடுவில் கிராமத்தில், ஓர் ஒதுக்குப் புறத்தில் செயற்படுகின்றது.

இவ் இல்லம் சாதி. மத, பேதமற்ற மாசற்ற சிறுவர்கள் ஒருமித்து இருக்கும் ஓர் ஆலயமாகும். இங்கு முப்பத்தைந்து (35) விவேகக்குறைபாடுகள் உள்ள சிறுவர்கள் உள்ளனர். இங்கு அனுமதிக்கப்படும் ஆண் சிறுவர்களின் வயதெல்லை 15 ஆகும், பெண்கள் பருவமடையும் மட்டும்.

இல்லத்திற்குப் பொறுப்பாக விசேட பயிற்சிபெற்ற அருட்சகோதரி கிறிஸ்ரியானுவுடன், மேலும் நான்கு அருட் சகோதரிகளும், சில பெண்தொண்டர்களும், பணியாற்றுகின்றார்கள். தியாக சித்தை, எல்லையற்றபொறுமை, கருணை, பாசஉணர்வுகளுடன் பராமரிப்புப் பணியை மேற்கொள்கின்றார்கள். தியாக சிந்தையுடைய வைத்தியர்களால், வைத்திய சேவையும் இலவசமாக வழங்கப்படுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, அருட் சகோதரிகளின். செபம் மன்றாட்டுக்கள் கூடிய பலனைக் கொடுக்கின்றது.

05. 04. 1988 அன்று முதல் தவணை விடுமுறையாகும். அன்றையதினம் பெற்றோர்களும் இல்லத்திற்கு அழைக்கப்பட்டனர். சிறுவர்கள் பெற்ற பயிற்சிகளாகிய, யோகா உடற்பயிற்சிகளைக் கண்ணுற்ற நாம் அங்கு, இப்பயிற்சிகளைப் பயிற்றுவித்த, பராமரிப்பாளர்களின், எல்லையற்ற பொறுமையுடன் கூடிய சேவையினை நினைத்து வியப்படைந்தோம். சிறுவர்களால் வரையப்பட்ட சித்திரங்கள், கைத்திறனால் ஆக்கப்பெற்ற பல்வகைப் பொருட்கள் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தன. எம்மால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாதளவுக்கு, இப்பொருட்கள் எம்மைப் பிரமிக்க வைத்தன.

சிறுவர்கள் வைத்தியர் திரு. சோமசுந்தரம் அவர்கள், சிறுவர்கள் விவேகக்குறைபாட்டுடன் பிறப்பதற்காகிய பல்வேறு காரணங்களையும் கூறினார்:

அவற்றுட் சில:

தாய் கர்ப்பமுற்றபின் முதல் மூன்று மாதங்களும் வெகு அவதானத்துடன் இருக்க வேண்டும்.

கரு சிதைவுற எவ்வித முயற்சியும் மேற்கொள்ளக்கூடாது.

கர்ப்பவதி போஷாக்குள்ள உணவை உட்கொள்ள வேண்டும்.

கர்ப்பமுற்ற காலத்தில், நோய் ஏற்பட்டால் தகுந்த சிகிச்சை பெறவேண்டும்.

திடீர் அதிர்ச்சி, பரம்பரையாகவும் பாதிப்புக்கள் ஏற்பட வழி உண்டு.

பிறப்பின் பின்பு பாதிப்பு ஏற்படுவதனால் மூளைக்காய்ச்சல், வேறு நோய்களும், பாதிப்புக்கு வழிகோலும் என்றார். எமக்கிருக்கும் சந்தேகங்கள், அறியாமை தப்பபிப்பிராயம் ஆகியவை நீங்க வினா எழுப்பச் சந்தர்ப்பம் கிடைத்தது. நாம் எழுப்பிய வினாக்களுக்கு வைத்தியரின் உரிய பதில்கள் மூலம் எங்கட்குத் தெளிவை ஏற்படுத்தினர்.

சிற்றுண்டியின் பின்பு, சிறுவர்கள் வீடு செல்வதற்கு ஆயத்தமானார்கள். சிறுவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் கையசைத்து விடைபெறும் வேளையில் அருட்சகோதரிகள் தொண்டர்களின் கண்கள் கலங்கிய காட்சி எம் நெஞ்சங்களை நெகிழச்செய்தது.

சிறுவர்கள் ஒரு மாதகாலத்திற்குத் தம்மை விட்டுப்பிரிந்து செல்கின்றார்களே என்ற எண்ணம் பராமரிப்புப் பணியில் தம்மை அர்ப்பணித்த புண்ணியவதிகளுக்குச் சோகத்தை ஊட்டியது. இவ் இல்லத்தினைப்பற்றி அறிந்தோர் ஒரு சிலர், அறியாதோர் பலர்.

வ. அ. இம்மனுவேல்
ஊறணி, காங்கேசன்துறை.

மனிதரும் மதிகேடும்-4

சடமான சராசரம் தளம்பாத ஒழுங்குடன் இயங்குகிறது; அதை ஆக்கிக் காக்கும் பரம்பொருளின் அறிவையும் வல்லமையையும்விளம்புகிறது. சடப்படைப்பின் சிகரமான மனிதனைக் கடவுள் ஆணும் பெண்ணுமாகப் படைத்தான் (ஆதி. 1 29) அந்தப் படைப்பின் விசேட பண்புகளை ஆதியாகம ஆசிரியர் விளக்க முயல்கிறார் (ஆதி. 2.18-23). கதையின் விபரங்களிலே கற்பனை கலந்திருந்தாலும் கருதிய பாடங்களே நமக்குப் பிரதானம்.

ஆதாம் அறிவு முதிர்ந்த ஆளாகத் தோன்றுகிறான்; படைக்கப்பட்ட மிருகங்களுக்குத் தகுதியான பெயர் சூட்டுகிறான். அவன் தன்மையாயிருக்கிறான்; சரிநிகரான துணையொன்று அவனுக்குத் தேவையாயிருந்தது. எனவே, அவன் அரை மனிதன் மாத்திரமே என்பதை உணரச் செய்த பின்னரே கடவுள் பெண்ணைப் படைக்கிறார். ஆழ்ந்த நித்திரையிலே அவனுடைய உடலிலிருந்து ஏவாள் உருவாகிறாள்; சாவின் மூலமே சீவியம் என்ற இயற்கை நியதிதோன்றுகிறது. விலாவிலிருந்து உருவானதென்பதால் அவள் ஆதாமுக்குச் சமனான துணை என்பது வற்புறுத்தப்படுகிறது.

அவளைக்கண்ட ஆதாம் ஆனந்தமடைகிறான்; தனது மாமிசமும் எலும்புமென்பதை உணருகிறான். மனிதனிலிருந்து எடுக்கப்பட்டபடியால் மனிதி; இருவரும் சமமானவர்கள், ஒன்றானவர்கள். உடலிலும் உளத்திலும் உயிரிலும் ஒருவருக்கொருவர் துணையும் நிறைவுமாயிருக்கவேண்டிய வர்கள். ஆண் பெண்ணுக்கு. பெண் ஆணுக்கு, இருவரும் மக்களுக்கு. எல்லாரும் படைத்தவனுக்குச் சொந்தம் என்ற உறவு புலனாகிறது.

வேற்றுமையில் ஒற்றுமை காண்பது இயற்கையின் அதிசயம். அதின்படி சமமும் நிறைவுமான ஆணும் பெண்ணும் உடலிலும் உளத்திலும் வித்தியாசமான பண்புகளோடு விளங்குகின்றனர். உற்பத்தியிலும் கருவிலும் வளர்ச்சியிலும் உண்டாகும் அதிசய மாற்றங்களிடையே இயற்கையின் சக்தி இரு பாலாரையும் வேறுவித வேலைகளுக்குத் தயார் செய்வதை நவீன விஞ்ஞானம் விபரமாக விளக்குகிறது. உடலுறுப்புகளின் உருவமும் இயக்கமும் விசேடம்; மனை உணர்ச்சிகளின் பண்போ மிக வித்தியாசம் என்பது அறிவியல் முடிபு.

ஆனால் நியாயபுத்தியும் சுதந்திர சக்தியும் பெற்ற மனிதன் படும் பாடுகளைப் பார்ப்பது பரிதாபமே! முதலிலே படைக்கப்பட்ட ஆண்பொறுப்பைப் பெற்றான். சமனான துணையாக உண்டான பெண் ஒத்துழைக்கும் உத்தியோகம் பெற்றவள். இந்த இயற்கை ஒழுங்கை அவர்கள் மாற்ற முயன்று அவலப்பட்டனர். ஏவாள் மூப்புப்பண்ண முன் வந்தாள். தனிய உலாவப் போனாள், வேடிக்கையாகச் சர்ப்பத்தோடு சல்லாபித்தாள்; எல்லாமறிந்தவள்போலவாதிக்கத் துணிந்து அணுப்புண்டாள். புத்தியைப் பாவியாது பழத்தைப் பிடுங்கிப் புசித்தாள். மாப்பிள்ளை என்ன செய்தார்? மனைவியின் மாய மாலத்திலே மயங்கி விட்டார். முடிவெடுக்கும் பொறுப்பை மறந்து ஆளவேண்டியவன் அடிமையானான். கடவுள் கட்டளையை மீறிப் பெண்ணுக்குப் பணிந்தான். அணுப்புண்டவர் அணுப்புகிற நாடகம் தொடங்கியது. கிடைத்த புத்தியைப் பாவியாத பேதைமை, இறைவனேடிருந்த உறவைத் துண்டித்து உயிர்வாழ்வை இழந்தனர், நிர்வாணிகள் என்பதை உணர்ந்தனர். கடவுள் வைத்த ஒழுங்கைக் குழப்பினர், குழம்பினர். தொடர்கின்ற மனித சரிதையிலே ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் பழிவாங்குவதையே பார்க்கிறோம். அணுப்பி அடிமையாளவே போட்டிபோட்டு மாட்டிக் கொள்கிறார்கள். இந்தச் சோக சரிதை இன்று மட்டும் தொடர்வதுகண்கூடு. மதியைப்பாவித்து மாறமுடியாதா? மாற்ற இயலாதா? வஞ்சனையும் போட்டியும் இயற்கைக்கே எதிராதலால் மனிதனின் பயித்தியம் என விலக்கப்பட வேண்டும். கொடுத்துவாங்குவது, பகிர்ந்து பாவிப்பது பழகவேண்டும், பயித்துச்சுவைக்கும் பேதமை நீங்கவேண்டும். (வளரும்)

அபிமி

திருச்சிலுவைக் கன்னியரின் நடமாடும் சுகாதார சேவை

திருச்சிலுவைக் கன்னியரால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நடமாடும் சுகநலப் பணி அவர்களுடைய பொது நலச் சேவையின் ஓர் அம்சமாகும். 1930 ம் ஆண்டில் யாழ். மேற்றிராசனத்தில் காலடி எடுத்து வைத்த நாட்தொட்டக்கம் அரசினர் வைத்தியசாலையில் நோயாளரைப் பராமரித்தல், முதியோரைப் பராமரித்தல், பாலர் விடுதி நடத்துதல் மறைக்கல்வி புகட்டுதல், இளம் மகளிர் விடுதி, தனியார் மருத்துவ மனையில் சேவை, சமூக சேவை, திருச்சிலுவைச் சுகநலப்பணிமனையில் வைத்தியமும் பராமரிப்பும் என்பவை மூலம் வளர்ந்து கொண்டு வந்திருக்கின்றனர்.

"காலத்தின் தேவைகளில் ஈடுபடுவதே இறைசித்தம்" (The need of the time is the will of God.) இது திருச்சிலுவைக் கன்னியர் சபையின் ஸ்தாபகரான அருள்தந்தை புளோரன்றினியின் குறிக்கோள். திருச்சிலுவைச் சுகநலப்பணிமனையின் பணி இக்குறிக்கோளின் ஒரு பகுதியையே அடைய வழிவகுத்தது. அரசாங்கத்தால் அளிக்கப்படும் இலவச சௌக்கியசேவைகளைப் பெறமுடியாத பின் தங்கிய கிராமங்களில் வதியும் மக்களின் சுகநலம் பேணும் அவசியத்தைக் காலத்தின் தேவையாக அவர்கள் உணர்ந்துள்ளனர். மனிதமுன்னேற்ற நடுநிலையத்தினூடாக ஒல்லாந்து தேசத்தின் CEBEMO ஸ்தாபனத்தின் நிதி உதவியுடன் இச்சிந்தனை செயலுருவெடுத்தது. 1987 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் இந்திய அமைதிப்படையினரால் நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையின் விளைவால் பெரும்பாலான மக்கள் அகதிகள் ஆகியமையால், அகதி முகாம்களில் இவ்வத்தியாவசிய பரிகாரச் சேவையில் நடமாடும் சுகநலப்பணி தனது சேவையை ஆரம்பித்தது.

நாளடைவில் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகத் திகழும் சில வைத்தியர்கள், வைத்திய மாணவர்கள், தாதிகள், தொண்டர்கள், துறவிகள் ஆகியோரின் உதவியுடனும், கருணை உள்ளமும் கொண்டவள்ளன்மையும் படைத்த ஸ்தாபனங்களான ரெட்பானு, குவேக்கர் பீஸ் அன்ட் சேர்விஸ், குழந்தை பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் தாராள உதவியுடனும் அவர்களது பணி விரிவடைந்துள்ளது.

நாட்டுப் பிரச்சினையால் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டு சுகாதார மருத்துவ வசதியின்றி, போஷாக்குள்ள உணவின்றி வாழும் மக்கள் மத்தியில் நோய்களுக்குப் பரிகாரமும், தொற்றுநோய்களுக்குத் தடுப்பு மருந்துகள் என்பனவும் அளித்து, சுகாதாரம்பேணுதல் தொற்றுநோய்களைத் தடுக்கும் முறை, நிறைஉணவு பற்றிய விளக்கங்கள், ஆலோசனைகளைக் கொடுத்து உதவுவது இன்றைய பணியாகும். தீவுப்பகுதியில் புங்குடுதீவு, வேலணை, காரைநகர், மாங்குளத்தில் முத்தையன்கட்டு, வன்னிக்குளம், பாண்டியன்குளம் ஆகிய கிராமங்கள் உட்பட ஐம்பது பின்தங்கிய கிராமங்களில் மருத்துவ சேவை நடைபெற்றுள்ளது. அத்துடன் பாடசாலைகளுக்கும் சென்று சௌக்கியம் சம்பந்தமான அறிவுரைகளும் அளிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்கால அனுபவத்தில் உடல்நோய் என முறையிட்டவர்களில் பெரும்பான்மையினர் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வன்செயல்களால் தாக்கப்பட்டு பொருள் இழந்து, வீடு இழந்ததாலும், இளம்பெண்களில் பலர் விரும்பி மதிக்கப்படாத கற்பை இழந்ததாலும், உற்றார், சுற்றத்தாரின் கோரக்கொலைகளைக் கண்ணினால் கண்டதினாலும் ஏற்பட்ட மனவேதனை உடல்நோயாக வெளிக்காட்டுவதைக் காணலாம். இவற்றிற்கு நிவாரணம்தேவை. அத்துடன் அன்றாட வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய வழியறியாது விரக்தியடைந்த இளைஞர்கள் போதைவஸ்து உபயோகித்தல், மதுபானம் அருந்துதல், புகைத்தல் ஆகிய தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகித் தம்மை மெதுவாக அழித்துக்கொண்டிருப்பதையும் காண முடிகிறது.

சமுதாயத்தில் காணப்படும் புல்லுருவியை அறவே அழிக்க முடியாவிட்டாலும் மேற்கூறிய தீர்ப்பழக்கங்களின் கெடுதிகளை எடுத்துரைத்து அவற்றை மேற்கொள்ளக்கூடிய ஆலோசனைகளையும் அளிக்க இவர்கள் இப்போது பாடசாலைகளில் உயர்தர மாணவர்களுக்கு உரைகள் வழங்கவுள்ளனர்.

"ஒவ்வொரு குழந்தைக்கும் தான் திட்டமிடப்படவும், விரும்பப்படவும், அன்பு செலுத்தப்படவும் உரிமையுண்டு" இதைச் சாத்தியமாக்குவதற்கு உதவும் முகமாக, நம்பத்தகுந்ததும், பாதுகாப்பானதும், திருமண உறவை வளர்ப்பதும் எல்லாமதக் கொள்கையினரும் ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான திட்டமிடப்பட்ட குழந்தைப்பேறு, இயற்கைமுறை கருத்தடை பற்றியும் குடும்பநலத்திட்டம் பற்றியும், மகப்பேறடைவதில் சிரமம் உள்ள தம்பதிகளுக்குத் தகுந்த ஆலோசனைகளையும் அளிக்க முன்வந்துள்ளனர். இந்தப்பணி இல 115, 4 ம் குறுக்குத் தெருவிலுள்ள நற்சமூக நடுநிலையம் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நடைபெறவுள்ளது.

தேவையான விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

Holy Cross Mobile Health Centre,
Beach Road, Jaffna, Sri Lanka.

நடமாடும் சுகாதார சேவை,
(திருச்சிலுவைக் கன்னியர்)
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வளித்த வள்ளல்

முதன் முதல் கடவுளுக்கும் அவரது அரசுக்கும் முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற பாடத்தைக் கற்பிக்கும் கதை.

கிழக்கு வெளுத்தது. கண் விழித்த பறவையினங்கள் "நாங்கள் எழுந்து விட்டோம்" எனக் கூறிப் பறந்தன. திரேசம்மாவின் வீட்டுச் சேவல் விடாமற்கூவித் திரேசம்மாவின் மகள் ராணியை எழுப்பியது. அவள் எழுந்து காலைக் கடன்களை முடித்து விட்டுத் தேநீர் தயாரித்தாள். அவள் தயாரித்துக்கொண்டிருக்கவே அவளது தாய் திரேசம்மா எழுந்து "விடிந்தது கூடத் தெரியாமல் நித்திரை செய்து விட்டேன். என் ராணி நேரத்துக்கு எழும்பிவிட்டாள்போல இருக்கு" என்று கூறி முடிப்பதற்கும் மகள் நேநீர்கொண்டு வரவும் சரியாகவிருந்தது. அவள் வந்து 'அம்மா இன்று கடன்திருநாள் பூசைக்கு வரவில்லையா நீங்கள்? நான் பூசைக்குப் போகிறேன்" என்றாள். தாய் கொட்டாவிவிட்டபடியே "நீர் போய் எங்களுக்காகவும் மன்றாடி வாரும்" என்றார். பின்பு அப்பாவுக்கும் தேநீர் கொடுத்துவிட்டு, கோவிலுக்குப் போக ஆயத்தமானாள். பூசைக்கு மணி "டாண், டாண்" என்று ஒலி எழுப்பியது. அவள் அவசர அவசரமாகச் செபமாலையை எடுத்துக்கொண்டு வேகமாக வீட்டை விட்டு வெளியேறினாள். பூசைக்குப் போகும் வழியில் அவளது அப்பா சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. அவளுக்கு அழுகைதான் வந்தது.

அப்பாவை அவள் கோவிலுக்கு வரும்படி கேட்டபோது "நீ இன்று நான் வேலைக்குப் போகாமல் வீட்டில் இருக்கலாம். காசு இருக்கிறது. ஆனால் வீணாகக் காசை என் எடுப்பான்? நாளைய சாப்பாட்டிற்கு நான் இன்று கட்டாயம் வேலைக்குப் போகவேண்டும். நான் இன்று போகாவிட்டால் நாளை உணவுக்குக் கடவுளா காசு தருவார்?" என்றார். இந்த வார்த்தைகள் அவள் மனதை வருத்திய வண்ணமேயிருந்தன. ஒருவாறு கோவிலை வந்தடைந்தாள். பூசையில் தாய்க்காகவும், இப்படிப் பேராசைகொண்ட தந்தையின் மனதை மாற்றுப்படியும் வேண்டினாள். பூசை முடிந்தது.

வீட்டுக்குப் போனாள். ஒருவரையும் காணவில்லை. அயலவரை விசாரித்தாள். "ஆஸ்பத்திரிக்குப் போனால் விஷயம் அறியலாம்" என்று பெண் ஒருத்தி கூறினாள். உடனே அவள் தாமதியாது ஆஸ்பத்திரிக்கு ஓடினாள். அங்கே நின்றவர்கள் எல்லோரும் அழுதபடி இருந்தார்கள். அவள் "என்ன நடந்தது?" என ஒரு இளைஞனைக் கேட்டாள். அவன் கூறினான், "உங்கள் அப்பா வந்துகொண்டிருந்தார், ஒரு கல்லில் திடீரெனத் தடக்குப்பட்டு விழுந்தார். நாங்கள் எழும்புவார் என நின்றிருந்தோம். அவர் எழும்பவேயில்லை. குப்புறவே கிடந்தார். நாங்கள் ஓடி வந்து பார்த்தபோது அவரது வயிற்றில் பெரிய காயம். உடனே நாங்கள் அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றோம். இரத்தம் கூடுதலாக ஓடிவிட்டதால் அவரது நிலைமை மோசமாகவிருந்தது. இரத்தம் ஆஸ்பத்திரியில் தற்போதைய நிலையில் இல்லை என்றார் வைத்தியர். அதனால் உங்கள் அப்பாவுக்கு ஆபத்தான நிலை, உங்கள் அப்பாவைக் கூடுதலாகத் தெரிந்த ஓர் இளைஞன், எங்களுடன் நின்றான். அவன் தானே இரத்த தானம் செய்வதாகச் சொன்னான். அவனது இரத்தம் உங்கள் அப்பாவுக்கு ஏற்றப்பட்டது. அவன் இரத்த தானம் செய்திராவிட்டால் உங்கள் அப்பாவின் நிலை..." அவள் எல்லோரையும் தள்ளிக்கொண்டு அப்பாவிடம் ஓடினாள். அப்பாவைப் பார்த்தபோது அழுகை வந்தது. அழமுடியாத நிலைமை. அவள் என்ன செய்வாள்.

எழுந்து வந்து "அப்பாவுக்கு இரத்தானம் செய்த இளைஞன் யார்?" என வினவினாள். அந்த இளைஞன் வந்தான். அவளுக்கு அவனைப் பார்க்கத் தெரிந்த முகமாகவிருந்தது. அடையாளம் கண்டுகொண்டாள். அவனுல் அடையாளம் காணமுடியவில்லை. அவள் "உங்களை எனக்குத் தெரியும். என்னை நீங்கள் மறந்துவிட்டீர்களா? எனக் கேட்டாள். அவன் "எனக்கு உங்களைத் தெரியாதே நீங்கள் யார்?" என வினவினான். "எனது பெயர் ராணி. எனது முழுப்பெயர் மேரிராணி. நான் உங்களுடன்தான் ஒரே வகுப்பில் படித்தேன். உங்கள் பெயர் சந்திரன் தானே?" என்றாள்.

"உங்களுக்கு அவ்வளவும் ஞாபகமாக இருக்கிறதே! நான் எல்லாம் மறந்துவிட்டேன்" என்றார். அவனது நினைவலைகள் எங்கெங்கோ சென்றன. சிந்தனையில் ஆழ்ந்தான்.

இவர்கள் இருவரும் ஒரு பாடசாலையில் படித்தவர்கள், சில நாட்களே ஒன்றாகப்படிக்க வேண்டிய நிலைமை. காரணம், சந்திரனுக்குத் தாயும் சகோதரங்களும் மட்டும்தான் உள்ளனர். தந்தையைச் சிறுவயதிலேயே பறிகொடுத்துவிட்டான். தாய் கஷ்டத்தின் மத்தியிலும் தனது மூத்த மகனை ஒருவாறு படிப்பித்தாள். அவனுக்கு மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருந்தார்கள். மூத்தவனே குடும்பப் பொறுப்பை ஏற்கவேண்டிய காரணத்தால் படிப்பைப் 10ம் வகுப்புடன் நிறுத்திவிட்டான். அவன் 11ம் வகுப்புப் படிக்கக் கூடிய நிலைமையிருந்தும் உழைக்கவேண்டிய காரணத்தால் விட்டுவிட்டான். சில வருடங்கள் வெளிநாடு சென்று சகோதரர்களைப் படிக்க வைத்தான், இப்பொழுது தான் படித்த ஊரில் வந்து நிற்கிறான். ராணியோ பெரிய பணக்காரக் குடும்பம். அவளது தந்தை "நீ படிக்கும்வரை படி" என்று கூறினார். அவளும் படித்து முடித்துவிட்டு ஒருவேலை செய்ய வேண்டுமென்ற ஆசையில் திரிகிறாள். திடீரென ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். ராணியின் தாய் டம்ளரை எடுத்தபோது கீழே விழுந்த சத்தம் அந்தச் சத்தம். அவளை அவன் நிமிர்ந்து பார்த்தான். அவளும் யோசனையில் மூழ்கியிருந்தாள். சில நிமிடங்களில் அப்பாவைத் திரும்பிப் பார்த்தாள். அப்பா கண்விழித்துப் பார்த்துகொண்டிருந்தார் அவர் எழும்பும்போது பிற்பகல் 6 மணியாகிவிட்டது "அவர் யாரம்மா?" என விசாரித்தார். அவள் தந்தைக்கு விளக்கமாகக் கூறினாள்.

தந்தை திரும்பவும் "மகளே நான் செய்த பாவத்திற்குப் பரிகாரம் கிடைத்துவிட்டது. கோவிலுக்குப் பூசைக்கு வரச் சொன்னீரே. நான் வந்திருந்தால் எனக்கு இப்படியெல்லாம் நடந்திருக்குமா? நான் வேலைக்குப் போனபாடுமில்லை" என்று அழுதவாறு கூறினார். அப்பொழுது ராணி "அப்பா நீங்கள் செய்த பிழையை உணர்ந்துவிட்டீர்கள். உங்கள் பாவங்களைக் கடவுள் மன்னிப்பார்" என்றாள். அப்போது தாய் குறுக்கிட்டு "மகளே மரணத் தறுவாயில் இருந்து உமது அப்பாவைக் காப்பாற்றிய இவனை நீ மணம் செய்கிறாயா? உன்னோடு படித்தவன், பழக்கப்பட்டவன், ஏழையென்றாலும் பரவாயில்லை" எனக் கூறினாள். தாயும் தந்தையும் மனம்மாறியதையிட்டு மகிழ்ச்சி ஒரு பக்கமிருக்க தன்னோடு படித்தவனை தன் வாழ்க்கையின் துணைவனாக ஏற்கவேண்டிய சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைந்தாள். தாயார் மீண்டும் "மகனே உமக்குச் சம்மதமா?" என வினவினாள். தாயின் சம்மதத்துடன் தான் நாளை வருவதாகக் கூறி விடைபெற்றான். மறுநாள் காலை தாயுடன் ராணியின் வீட்டை அடைந்தான். அவனது தாய் மருமகனைப்பார்த்து விட்டு தனக்குப் பிடித்திருப்பதாகக் கூறினாள். திருமணத்துக்கு நாள் குறிப்பிட்டுத் தாயும் மகனும் சென்றார்கள். ஒரு வாரத்தால், அவளது திருமணநாளும் வந்துவிட்டது. அவளது வீடு அலங்காரத்தால் நிறைந்திருந்தது. மணமகன் வீட்டார் மணமகளை அழைத்துக்கொண்டு சென்றார்கள். தந்தையும் கோவிலுக்கு மகிழ்ச்சியுடன் போனார். திருமணம் கோவிலில் இனிதே நடந்து முடிந்தது. (யாவும் கற்பனை)

ஆக்கியவர்:-
செல்வி மேரிமாலதி
ஞானதெத்தினம்
10ம் வட்டாரம், புங்குடுதீவு

கோணேசர்

ஆண்டின் 12ஆம் ஞாயிறு (26-6-88)
சாகாவரம் வேண்டும்

ஞான 1: 13-15; 2: 23-25, 2 கொரு 8: 7, 9, 13-15
மாற்கு 5: 21-43

மரணம் ஒரு பேரிழப்பு. அன்பர்கள், நண்பர்கள், உழைப்பாளிகளை மரணம் விழுங்கிவிட்டால், எம் உள்ளங்கள் இதனைத் தாங்கிக் கொள்வதில்லை. மகா வீரர்களோ, அறிவாளிகளோ, செல்வந்தர்களோ, அனைவரும் மரணத்தின் முன்னிலையில் பேராமடந்தைகளாகிறார்கள். காரணம் அதன் பிடியில் இருந்து தப்பமுடியாமையே மரணத்தை வாழ்க்கைப் பயணத்தின் முற்றுப் புள்ளி எனக்கருதும், உயிர்களுக்கு மரணம் பெரும் துன்பம். அது அவர்களை அடிமைப்படுத்துகின்றது. ஆடி அடங்கும் வாழ்க்கை ஆறடிமண்ணே அவனுக்குச் சொந்தம் என்பது உண்மையல்ல.

அழியாமைக்கென மனிதனைப் படைத்த இறைவன், காலங்களைக் கடந்த தமது சாயலாக அவனைப் படைத்து என்றும் வாழ வழி வகுத்தார். சாவைக் கடவுள் உண்டாக்கியவரும் அல்லர். மரணம் மனித வரலாற்றின் இடையிற் புகுந்த ஒரு திமையே சாவுக்கு அப்பாலும் வாழ்வு உண்டு என்று நம்புகிறவருக்கு, அது பெரும் துன்பமாக. இழப்பாக, அடிமைத்தனமாக அமைவதில்லை. செபக்கூடத் தலைவனாயிரந்தனது மகள் இறந்துவிட்டாள் என வருந்துகிறார். வாழ்வுக்கும் சாவுக்கும் தலைவரான யேசுவின் பாதத்தில் மண்டியிட்டு உயிர்ப் பிச்சைக்காக மன்றாடுகின்றார். யாயீர் போன்ற விசுவாசமுள்ளவர்க்கும், காலங்களைக் கடந்து இறைவனில் நம்பிக்கைகொள்வோர்க்கும், மரணம் ஒரு தூக்கமே. "சிறுமி சாகவில்லை, தூங்குகிறாள்." எனக்கூறி இறந்துபோய் இருந்த அப்பெண்ணை எழுப்பிவிட்டார் யேசு. இயற்கையின் கொந்தளிப்பிற்கும். நோய்கள், பேய்களுக்கும், மட்டுமல்ல, மரணத்திற்கும் ஆண்டவர் யேசு. மருத்துவருக்கும் தீராத நோய் என்று தீர்க்க முடியாத துன்பம் உண்டு. இறந்தவர்களை உயிர்ப்பிக்க மருத்துவம் முயற்சிப்பதிலை. ஆனால் யேசு உயிர் கொடுத்தவர் என்பதும், அவர் உயிர்த்து எழுந்தார் என்பதும், மரணம் என்ற திமை, ஆண்டவனை அடிமைப்படுத்த முடியாது என்பதைத் தெளிவாக்குகிறது.

மரணம்-மனிதனை மிரட்டலாம். இறைவனிடம் விசுவாசம் கொள்பவரையும், அவரது பாதையில் தொடர இலட்சியம் கொள்பவர்களையும் மரணம் தடுக்க முடியாது உயிரைத் துச்சமென்று கருதி, விசுவாசத்திற்காக, உடலை அர்ப்பணித்த புனிதர்கள். தியாகிகள் பலருண்டு. மரணத்தைக் கடந்து, மலரும் வாழ்வை நினைத்து இன்பங்களைத் துறக்கும் துறவிகளும் உண்டு. நீடித்த வாழ்வின் உயர்வை எண்ணி விண்ணகப் பண்புகளை, வாழ்வில் கடைப்பிடித்து நேரிய பாதையில் விரையும் நல்லவர்களும் உண்டு. அதை விடுத்து மரணத்திற்குப் பயந்து கோழைகளாகக் குறுக்கு வழிகளை நாடக்கூடாது. மரணம் ஓர் இழப்பு என்றுஎண்ணி, மனம் வருந்தி, தம் உயிரையும் வீணே மாய்த்து விடவும் கூடாது. மரணம்வரைதான் வாழ்வு என்று கூறித் தலைமுன பாதையில் வழிநடத்து அடிமைகளாயும் விடவும் கூடாது.

சாகாவரம் கொண்ட இறைவனின் வல்லமையின் துணையுடன், வாழ்வை நிரந்தரமாக்கி, மலரவைக்க, அவரில் அவரோடு நீடுழி வாழ முயற்சிப்போம்.

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

தினந்தோறும் செபம்

பேரரசன் நெப்போலியனிடம் மேடம் கேம்பன் பெண்கள் பள்ளிக்கான கால அட்டவணை ஒன்று தயாரித்து கொடுக்கப் பட்டது. அவன் எல்லா ஒழுங்கு விதி முறைகளையும் படித்துக் கொண்டே வரும்போது ஓரிடத்தில். "இளம் பெண்கள் வாரம் இருமுறை செபம் செய்யவேண்டும்" என்ற வாக்கியத்தை கண்டவுடன், தனது எழுதுகோலை எடுத்து 'இருமுறை' என்பதை அழித்துவிட்டு "தினந்தோறும்" என்று எழுதி திருத்தம் செய்தார்.

(நன்றி — தோழன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுயுகம் காண்போம் வாரீர்!

நாம் வாழும் இவ் இருபதாம் நூற்றாண்டிலே எதிர் காலத்தில் ஓர் ஒளிமயமான வாழ்வை உருவாக்க வேண்டிய இன்றைய இளைஞர் சமூகம், புடமிடப்பட்ட பொன்னாக உருமாற வேண்டியது மிகவும் விரும்பியதொன்றாகும்.

இளைஞர் உலகம்
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை,
17-6-88

அன்பு இளம் நெஞ்சங்களுக்கு

சென்ற ஆண்டு ஆனியாதத்தில் இது நிகழ்ந்தது. நாட்டு நிலைமை காரணமாக, பாரம்பரியமாக இடம் பெற்றுவரும் சுற்றுலாப்பிரகாரம் தடைபட்டது. ஒரு சிலர் எப்படியாவது வழமைபோல் சுற்றுப்பிரகாரம் நடைபெறவேண்டுமென ஆர்ப்பாட்டம் செய்தார்கள். எனினும், நடுத்தந்தையார் "ஆடை வாபோல வழியால் அந்தோனியார் போவார்" என்று நகைச்சுவையாகக் கூறி, ஆடம்பரமான சுற்றுப்பிரகாரத்தை மிக எளிமையான முறையில் முடித்து வைத்தார். உண்மையான பக்தியுள்ளவர்கள், ஆழமான விசுவாசமுள்ளவர்கள் இதனை வரவேற்றார்கள். ஆனால் ஆண்டுக்கு ஒரு முறை ஆலயத்தைத் தரிசிக்கும் ஆடம்பர விரும்பிகளுக்கு பெரும் ஏமாற்றமாகவே இருந்தது.

ஆனால் நாட்டு நிலைமை ஓரளவிற்கு சாதகமான நிலைக்குத் திரும்பிவரும் வேளையில் எமக்கு ஏக்கமும் ஏமாற்றமும் கூடிச் செல்வது கவலைக்குரியதே. அநாவசியக் கொண்டாட்டங்கள், ஆடம்பரச் செலவினங்கள் அதிகரித்து வருகின்றன. அறநெறிப் பாடசாலைகளும் ஒலிபெருக்கிச் சத்தங்களும் கூடுகின்றன. கோவில் திருவிழாக்கள் வெறும் களியாட்டங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. அமைதி, அருள், பக்தி நிறைந்த புனித சூழல் பாதிப்படைந்து வருகின்றது. வீதிக்கு வீதி ஒலிபெருக்கிகளைப் பொருத்திவிட்டு வேடிக்கை பார்ப்பது, மாணவர்களைப் படிக்கவிடாது தொந்தரவு செய்வது எந்த வகையில் நியாயமாகும்? இதுதான் பொதுநல சேவையின் பிரதிபலிப்பா? ஆன்மீக நடத்துனர்களின் அசட்டைத்தனமா? திருநாள் களியாட்டங்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் இன்னும் தொடர்வது அவசியம்தானு?

இளைஞர்களே, ஏன் இன்னும் மாறாதிருக்கிறீர்கள்? இதற்கு நீங்களும் உடந்தைதானு?

அன்பு நெஞ்சன் வி. பி.

குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-23

அடைக்கலம்: அண்ணே, சமாதானம் சமாதானம் என்று எங்கு பார்த்தாலும் சொல்லினம். பல குழுக்களும் அமைக்கினம் அது எங்க அண்ணை நடக்குது?

குருசுமுத்தண்ணை: எடதம்பி, சமாதானக் குழுக்கள் தான் பெருகிச்சு. அதை செயல்படுத்துறதுக்கு அவையளுக்குள்ளேயே மோதல் பாத்தியே. சாதி ஒழிப்புக் கெண்டு குழுக்கள் பெருகி அதுகளுக்குள்ள மோதியது போலத்தான் இந்த சமாதானக் குழுக்களும். பேச்சுக்களும் கூடிச்சே யொழிய செயல்படுத்துகிறதில்லை. இவையளுக்க சமாதானம் செய்ய இனி ஒரு படை வெளியில் இருந்து வந்தாலும் ஆச்சரியமில்லை பார் தம்பி...

மணிக்கதைப் போட்டி

1ம் பரிசு : ரூ. 250/- — அளிப்பவர்: மணியோசை, யாழ்ப்பாணம்.

2ம் பரிசு : ரூ. 150/- — அளிப்பவர் : சில்வர் ரோன், யாழ்ப்பாணம்.

3ம் பரிசு : ரூ. 100/- — அளிப்பவர் : செந்தில் ஸ்பொட், நாவாந்துறை.

விதிகள் :

1. இளைஞர்களுக்குப் புத்துணர்வினை ஊட்டக்கூடிய கருத்துக்களைக் கொண்டது.
2. வெள்ளைத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப் படல் வேண்டும்.
3. 750 — 1000 சொற்கள்.
4. ஆடி 15க்கு முன்னர் 'இளைஞர் உலகம்' முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

படிப்படியாக வளர்ந்து வரும் இன்றைய சமூகத்தில் ஓர் இளைஞன் பற்பல தீயசக்திகளால் கவரப்படுகின்றான்; எண்ணற்ற துன்பங்களை எதிர் நோக்க வேண்டியவன் ஆகின்றான்; எது சரி, எது பிழை எனத் தெரியாது அங்கலாய்க்கிறான். அதுவும் கிறிஸ்தவ வாழ்வு என்றால் சொல்லவா வேண்டும். ஒன்று மாறி மற்றொன்று, அடுக்கடுக்காக ஏமாற்றங்களும் அங்கலாய்ப்புகளும், மனக்குழப்பங்களும், நீதியின்மையும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இளைஞனே! இந்நிலையில் உன் நிலை என்ன? தீய வாழ்வுக்குள் அகப்பட்டு போலிக் கிறிஸ்தவனாக அல்லது எதிர் காலத்தை மழுங்கடிக்கச் செய்யும் பிரஜையாக உருவாகுவதா? அல்லது அன்பர் யேசுவின் ஒளியில் சரியானதைத் தெரிந்து மனச்சான்றைக் கட்டுக் கோப்பாக்கி நல் வழிப்படுத்துவதா?

போர்களும், குழப்பங்களும், அட்டூழியங்களும், கலவரங்களும் கொலைகளும் கொள்ளைகளும் நீதியின்மையும், பகைமையும் நிறைந்திருக்கும் இவ்வுலக வாழ்வில் எப்படி நன்மையானதைச் செய்யலாம் என்ற சிந்தனையா?

ஆம். அன்று கிறிஸ்து, பாவத்தால் நாம் இழந்த விண்ணகப் பெருவாழ்வை மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சிலுவையில் இரத்தம் சிந்திப் பாடுபட்டார். தம் இறுதி உயிர் மூச்சு வரை மானிட விடுதலைக்காக உழைத்தார். அவரின் அடிச் சுவட்டில் வாழ அழைக்கப் பட்ட நீயும் அவருக்குச் சான்றுபகர முடியாதா? சமுதாயத்தின் இப்படிப்பட்ட தீமைகளை கண்டு பின்வாங்கலாமா? கிறிஸ்து அன்புருக்காக இத் துன்பங்களை அர்ப்பணித்து நேரிய வாழ்வில் ஒழுகாதிருக்கலாமா?

எனவே, இளைஞனே புது யுகம் காணப் புறப்படு. சமுதாய அடிமைத் தளைகளை தகர்த்தெறிந்து விடு. தீமையைத் தீமையால் வெல்லாமல் நன்மையால் வெல்லக்கற்றுக் கொள். இருள் சூழ்ந்த வாழ்விலும் கிறிஸ்து ஒளியை ஏற்றி விடு. அப்போது தான் ஒளிமயமான புதுயுகம் ஒன்றை நானும், நீயும் கண்டு கொள்ளலாம்.

எனவே, கிறிஸ்து அன்பரின் சீரிய ஒளியில் புது யுகம் காண்போம் வாரீர்.

பே. யஸ்ரின் சௌகான்
சில்லாலை-பண்டத்தரிப்பு

இயற்கை கடவுளை வெளிப்படுத்துகிறது. கலை மனிதனை வெளிப்படுத்துகிறது.

—வாங்வெல்லோ

காய்ந்த ஓலை தன்னிடத்தில் பசுமை இல்லை, என்பதை தன் அசைவொலியால் காட்டி விடுகிறது. பச்சை ஓலை தன் குளிர்மையைப் பாதுகாத்து அமைதியாக இருக்கிறது.

—வாங்வெல்லோ

மணமான வாழ்வு
ஒரு கல்விக் கூடம்

திரு + மணம்

குறள் தெய்வாம்சமாக இருப்பதனால் தான் 'திரு" என்ற அடைமொழி சேர்த்து திருக்குறள் என்று வழங்கப் பெறுகிறது. தெய்வம் பற்றிய நூல்களுக்கும் தெய்வத்தன்மை அடங்கிய நூல்களுக்கும் திரு என்ற அடைமொழி சேர்க்கப்பட்டது. இது போலவே ஆண் பெண் சேர்ந்து செய்கின்ற மணமும் தெய்வாம்சம் நிரம்பியிருக்கிறது என்பதால் மணம் என்பதுடன் திரு சேர்க்கப்பட்டு திருமணம் என்று பக்திப் பெருக்கத்தோடு கூறும்படி ஆயிற்று. திருமணம் என்பது ஒரு புனிதப்பயணமே "திருமணம் எனபது ஒரு கோட்டை. வெளியே இருப்பவர்கள் உள்ளே போகத் துடிக்கிறார்கள். உள்ளே இருப்பவர்கள் வெளியேவரத் துடிக்கிறார்கள்" என்கிறார் எமர்சன். திருமணம் என்பது ஆண் பெண் இருவருடைய கூட்டுப்பொறுப்பையும் வாழ்வையும் துவக்கி வைக்கும் புனிதச்செயலாகும். மனித உறவுகளிலே திருமணம்தான் மிக நெருக்கமானதும் முக்கியமானதுமாகும். மணவாழ்விலே உனக்கு வெற்றி கிடைத்து விட்டால் மற்ற எல்லாத் தறைகளிலுமே வெற்றி கிடைக்கும் என்பது உறுதி. நீ தனியாக இருக்கும்வரை இல்லற அமைப்பை உணர்ந்து கொள்ளவே முடியாது. திருமண வாழ்வினால் தான் அன்பு, பண்பு, அறம், கலை, விருந்தோம்பல், கூடி வாழ்தல், தியாகமனம் முதலிய நற்பண்புகள் உண்டாகின்றன. உழைக்க வேண்டும் என்ற மனப்பான்மையை வளர்ப்பதே திருமணம்தான். இது மனிதனின் பொறுப்புகளை அதிகரிக்கச் செய்கிறது. தனிமனிதன் பொறுப்பாலும் உழைப்பாலும் ஒரு குடும்பம் முன்னேறுகிறது. இப்படிப் பல மனிதர்களின் உழைப்பாலும் பொறுப்பாலும் நீதியும் நேர்மையும் வளர்ச்சியும் பெருகிப் பல குடும்பங்கள் சேர்ந்த ஒரு சமுதாயமே வளர முடிகிறது.

ஒருவனுக்கு ஒருத்தி என்றும் எல்லைக்கோடு வரைவது திருமணம். இருவருக்கும் ஒரு பாதுகாப்பைத் தருவது திருமணம். இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்து ஒருவருக்கொருவர் உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொண்டு ஆறுதலாக இருந்து ஏமாற்றங்களையும் எதிர்ப்புகளையும் சமாளித்து வாழ்வில் வெற்றிபெறச் செய்வது திருமணம். மனிதன் தன்னைத்தானே அறிய ஒரு வாய்ப்பு அளிப்பதும் திருமணம்தான். இல்லறம் என்ற அமைப்பு இல்லாவிட்டால் உலகில் மனிதக் கூட்டமும் ஒரு அநாகரிக விலங்குக் கூட்டமாகத்தான் இருந்திருக்கும். ஆண் பெண் இரு பாலாரிடையேயும் புனிதமான நல்லுறவை ஏற்படுத்துவதுதான் திருமணத்தின் நோக்கமாகும். அதில் தாலி அல்லது மாங்கல்யம் என்பது ஆணிற்கும் பெண்ணிற்கும் ஏற்பட்ட பந்த இறுக்கத்தை, கட்டுப்பட்ட நல்வாழ்வை, அன்பின் பிணைப்பைக் குறிக்கும். இது இரு உடல்களின் ஐக்கியமன்று: இரு உள்ளங்களின் ஐக்கியமாகும். ஒரு ஆத்மாவின் இல்லாத குறையை மற்றொரு ஆத்மா இட்டு நிரப்புவதே இல்லறம். திருமணம் என்பது இரண்டு அல்லது மூன்று வருடத்திற்கு மட்டும் கூடும் கூட்டுறவு அல்ல. வாழ்க்கையின் கடைசிச் சந்தர்ப்பமும் அல்ல. அது ஒரு பிரயாணத்துவக்கம். ஆண்மை, செழுமை, உண்மை, தயாளம், ஒழுக்கம், அன்பு, கருணை இவைகளை ஏற்படுத்துவதே திருமணம். இந்த நோக்கம் தெய்வீகமானது. ஆண் பெண் இருவரும் ஒன்றுபட்டு ஒரு மனதுடன் வாழும் கல்விக் கூடமே திருமணம். ஆண் பெண் ஒற்றுமைக்காகவே ஏற்பட்டது இந்த ஒற்றுமை இல்வாழ்க்கையில் ஆரம்பித்து எல்லோரிடமும் பரவுகிறது. ஆண் எவ்வளவுதான் பெருமையோடு வாழ்ந்தாலும் பெண் இல்லாமல் வாழ்வு நிறைவுபெறாது. திருமணம் என்பது ஒரு கல்விச்சாலை. ஆனால் இக்கல்விச்சாலை விசித்திர அமைப்புக் கொண்டது. அதாவது கணவன்மனைவி என்ற இருவருமே ஆசிரியர்கள். இருவரும் மாணவர்கள். அதாவது ஒவ்வொரு துறையில் ஒவ்வொரு காலத்தில் ஒருவர் ஆசிரியர். மற்றவர் மாணவர். ஆண்பெண் இருவருடைய கடமைகள் வெவ்வேறாக இருந்தாலும் தமக்குரிய நலன்களை எல்லாம் ஒன்றுபடுத்தி ஏகோபித்து வாழ்க்கை நடத்த ஆதாரமாக இருப்பது திருமணம். (தொடரும்)

—அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமறைப்பணி நிலையம்

இறைவாக்கினர்கள். த. பெ இல. 2,

ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

திரு நூலில் ''இறைவாக்கினர்'' பகுதி ஒரு முக்கிய அம்சமாகும், பழைய ஏற்பாட்டில் நாம் காணும் மூன்று பிரிவுகளில் இதுவும் ஒரு முக்கியமான பிரிவாகும். இவர்களின் காலம் கிட்டத்தட்ட கி. மு. 8-ம் நூற்றாண்டு முதல் கி. மு. 4-ம் நூற்றாண்டு வரையிலாகும்.

இறைவாக்கினரை எபிரேய மொழியில் ''நபி'' என்றழைப்பர். ''நப்'' என்றால், அறிவித்தல் எனப் பொருள் பெறும். எனவே, இறைவாக்கினரை 'அறிவிப்பவர்' எனலாம். இவர்கள் இறைவனின் சித்தத்தை இறைவார்த்தையாகப் பெற்று, தம் வார்த்தையூடு அதை மக்களுக்கு அறிவிக்க, விளக்க இறைவனின் ஆவியால் தூண்டப்பட்டு செயற்படுபவர்கள்.

இவர்கள் இறைவனின் செய்தியை தம் சூழமைவிற்கேற்ப, தமது கலாச்சாரப் பின்னணியுடனும், தமக்கே உரித்தான கற்பனைத் திறனுடனும் பேசினார்கள். இவர்கள் அரசர்களுக்கும் நீதிபதிகளுக்கும் அருகிலிருந்து ஆலோசனை கூறி, அவர்கள் கடமையை நினைவூட்டினர். அரசர்களும், மக்களும் தங்கள் நிலையிலிருந்து தவறியபோது, இறைவனின் தண்டனையையும் அவர்களுக்கு அறிவிக்க இறைவாக்கினர்கள் தவறவில்லை.

இவர்கள் இறைவனுக்கும் மக்களுக்கும் இடையாளர்களாக நின்று உண்மைக் கடவுளுக்கு சாட்சிகளாகத் திகழ்ந்து. ''ஒரே இறைவன்'' என்ற விசுவாசத்தை போதித்தும், வாழ்ந்தும் வந்தனர். மொத்தத்தில் இவர்கள் இஸ்ராயேலின் மனச்சாட்சியாகத் திகழ்ந்தார்கள்.

எல்லா இறைவாக்கினரின் வாக்குகளும் எழுத்து வடிவம் பெறவில்லை. இறைவாக்கினருள் மிக நீண்ட நூல்களை எழுதிய இறைவாக்கினர்களாகிய இசையாஸ், ஜெரேமியாஸ், எசேக்கியேல், தானியேல் போன்றவர்களைப் பெரிய இறைவாக்கினர்கள் என்றும், மிகுதி பன்னிருவரையும், சிறிய இறைவாக்கினர்கள் என்றும், அழைக்கின்றோம்.

நாம் பார்க்கப்போகும் இறைவாக்கினர் பகுதியாகிய, இப்பகுதியை இரு கூறுகளாகப் பிரித்து, 1. பெரிய இறைவாக்கினர்கள் 2. சிறிய இறைவாக்கினர்கள் என்று பார்ப்போம்.

இரா. சூசைநாதன்

பைபிள் கதை

வணக்கம் பிள்ளைகளே!

இறைவன் 'அபிமெலேக்'குக்கு மனத்திலே ஒரு கண்ணி வெடி வைத்தார் என்று சொன்னேன் தானே.

சாராளை அபகரித்துக் கொண்டு போன அன்றிரவே அவன் கனவில் ஆண்டவன் தோன்றி ''இதோ நீ அபகரித்த பெண்ணின் பொருட்டு நீ சாகப் போகிறாய்! எனெனில் அவளுக்கு கணவன் இருக்கிறான்'' என்று பயமுட்டினார்

நடுநடுங்கிப் போனான் அபிமெலெக்! ''ஆண்டவனே நான் சுத்த மனிதன். ஆபிரகாம் தன் மனைவி என்று சொல்லாமல் 'சகோதரி' என்றபடியால் தான் நான் அவள்மட்டில் ஆசை கொண்டேன். நான் கபடில்லாத மனத்தினன். என்னை மன்னித்தருளும் ஐயா''! என்று முகம்குப்புற விழுந்தான்.

இறைவன் அவனைநோக்கி ''மன்னித்தோம்—மறந்தோம் அவர் மனைவியை அவரிடமே ஒப்படைத்து விடு. அதுமட்டுமல்ல, அவர் ஒரு இறைவாக்கினர். ஆகவே அவரிடம் போய் நீ செய்த பிழைக்காக மன்னிப்புக் கேள்!''

''அப்படி நீ மன்னிப்பு கேட்கத் தவறினையோ? நீயும் உன்னைச் சேர்ந்தவர்களும் செத்தொழிவீர்கள்'' என்று சொன்னார்.

குலே நடுக்கம் எடுத்த அபிமெலெக் உடனடியாக எழுந்து தன் ஊழியர் அனைவரையும் வரவழைத்து ''நீங்கள் செய்த காரியத்தின் நிமித்தம் நானும் நீங்களும் செத்தொழிய இருந்தோம். நல்ல வேளை ஆண்டவன் எனக்கு அறிவுரை கூறினார். உடனடியாக நீங்கள் அவர் மனைவி சாராளை ஆபிரகாமிடமே ஒப்படைப்பது மட்டுமன்றி—ஆடு மாடுகள் வேலைக்காரர்கள், அதுமட்டுமன்றி, என்நாட்டையும் அவருக்கு கொடுத்து, நீர் விரும்பிய இடத்தில் சென்று குடியேறலாம்'' என்று உறுதி சொன்னார்.

ஆபிரகாம் நன்றியுடனும் மனமகிழ்வுடனும் அப்பரிசைப் பெற்று தன் மனைவியோடு சென்று கூடி வாழ்ந்தார்.

அதற்குப் பின்னாலே என்னச்சு? என்ற உங்கள் சேதியை கட்டாயம் சொல்வேன்.

உங்கள் எஸ். ஏ, நாதர்

அறிந்துகொள்ளுங்கள் 40

நைல் நதி செந்நீரானது

எகிப்தில் பாரவோன் மனம் கடினமாக இருந்தது. இஸ்ராயேல் மக்களை மோயீசனுடன் அனுப்ப மறுத்தான். மோயீசன் இறைவனிடம் முறையிட்டார், அவரது முறையீட்டைக் கேட்ட இறைவன் பத்து வாதைகளை ஒன்றன்பின் ஒன்றாக அனுப்பினார். அவற்றின் கொடுமையும் அதிகரித்துக் கொண்டே சென்றது. மோயீசனின் கோல் சர்ப்பமாக மாறியபோது அதைப்போல் தம்மாலும் முடியும் என செய்து காட்டிய எகிப்திய மந்திரவாதிகளால் (யாத். 7: 10-12) பின்னைய வாதைகளை நிறுத்த அதேபோல் செய்ய முடியவில்லை.

தொல்லை கொடுக்கும் வாதைகளில் முதல் ஒன்பது வாதைகளும் அந்நாட்டு இயற்கையோடு இணைந்தது. எகிப்தில் அவ்வப்போது நிகழ்வதாகும். மோயீசன் கோலை எடுத்து பாரவோனுக்கும் அவன் ஊழியர்க்கும் முன்பாக ஆற்றுநீரின் மேல் அடித்தார் அடிக்கவே தண்ணீர் இரத்தமாக மாறிப்போயிற்று (யாத் 7: 20)

நைல்நீர் செந்நீரானது எவ்வாறெனில் ஆண்டுதோறும் ஜூலைமாதத்தில் நதி வெள்ளப் பெருக்கெடுக்கும்போது ஆங்காங்கேயுள்ள செம்மண்ணையெல்லாம் வாரிக்கொண்டு வருவது இயல்பு. ஆனால் அதிலே மீன்கள் வாழமுடியும் மனிதரும் பருகலாம்.

மோயீசன் கட்டளையால் செந்நீரானபோது உயிர்களுக்கு தீங்கிழைத்தது. இவ்வாறு வெள்ளப்பெருக்கெடுக்கும் போது தவளைகளும் கொசுக்களும் பெருகுவது இயல்பு, மோயீசன் கட்டளையால் வந்தபோது அவை வழக்கத்திற்கு மாறுகப் பெரும் அளவில் பெருகின. தொல்லை கொடுத்தன இஸ்ராயேல் மக்களை இத்தொல்லை துன்புறுத்தவில்லை.

என் இவற்றைக் கடவுளின் வல்லமையைக் காட்டும் சான்று, புதுமைகளாகக் காண்பதென்னால். அவ்வாதைகள் மோயீசனால் முன்னறிவிக்கப்பட்டன அவரது வார்த்தையால் பிறந்து அவரது கட்டளையால் நின்றது மேலும் அந்தவாதைகள் காலம் தவறியும் துன்பம் மிகுந்தும் இருந்தன. இப்படியான கடின கொள்ளைநோய்களை எகிப்துநாடு இதற்கு முன் கண்டதில்லை.

இ. ம. ஜெயசீலன்.

அருள் மொழிகளை அறிந்து கொள்ளுங்கள்

அன்பு நல்லதுதான். ஆனால் துன்புறுத அன்பு, நிறைவற்றது. சுவையற்றது.

— புனித அகுஸ்தினர்

வான்வீடு உன்னிடம் இருக்கிறது. இதை மறந்து இறைவனை வேறு இடங்களில் தேடினால் ஏமாற்றமடைவாய்.

— அஞ்செலூஸ்

ஒளி: 2 சுடர்: 14	எம் விழிகளின் ஒளி யேசு எம் வாழ்வின் வழி யேசு

தாவீதடிகள் பரிசுத் திட்டம்

சிலுவைப் புதிர்: 3.



மனுக்குல இரட்சணியத்தைக் குறித்து இறைவன் வகுத்த திட்டத்தையும் வெளிப்படுத்திய உண்மைகளையும், நிகழ்த்திய வரலாறுகளையும் உள்ளடக்கிய நூல்களின் தொகுப்பே திருநூல் அல்லது வேதாகமம். வேதாகமத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியான் என்பது புனிதரின் மணிவாக்கு. ஆகவே, கிறிஸ்துவை முன்னிலைப்படுத்தும் வேதாகமப் புத்தகத்தை வீட்டில் ஒரு புனிதமான அரியணையில் ஏற்றிவைத்து, சமயசமயங்களில் அதைப் பத்தியோடு வாசித்தல் பயனுள்ள முயற்சியாகும் எங்களோடு உறவாடுவதற்கு இறைவன் விடுத்த கடிதந்தான் விவிலியம்.

★ கவனமாகப் படித்து விட்டீர்களா! புதிருக்கான விடை இதில் உள்ளது.

★ நடு மரத்தில் 5 எழுத்துக்களையுடைய சொல்வரும். இச் சொல் நூலுக்குரியது.

★ குறுக்கு மரத்தில் 3 எழுத்துக்களையுடைய சொல்வரும். இச் சொல் வேதாகமத்தை ஒவ்வொருவரும் இதோடு வாசிக்க வேண்டுமென்பதைக் குறிக்கும்.

★ மூன்று சிலுவைப் புதிர்களுக்கான விடைகளையும் ஒரு தாளில் எழுதி 30-6-88-க்குள் அனுப்பவும். தேவையான தகவல்களைத் தர மறக்கவேண்டாம்.

ஒன்றே குலம்

வாழ்விலே ஏற்படும் துன்பங்கள்
வசந்தத்தைக் குலைக்கும் சத்தங்கள்
காற்றிலே பறக்காத இதயங்கள்—நாம்
கனிந்து இறக்காத உள்ளங்கள்.

தாழ்விலே ஏற்படும் சோகங்கள்
தரணியில் நாம் பெறும் தாபங்கள்
அன்பிலே ஊறும் உள்ளங்கள்—அவை
ஆதரவு பெற்ற இல்லங்கள்.

வேற்றுமையில் உண்டாகும் வேதனைகள்
வேகாத எமது வேறுபாடுகள்
ஒற்றுமையில் காணும் இன்பங்கள்—அவை
ஒன்றே குலம் என்ற எண்ணங்கள்.

D. E. ரட்ணராஜ்
அங். எண். 65.

★ ★ ★

சிரியுங்கள், சிந்தியுங்கள்:

அப்பா, அம்மா.

அம்மா: இஞ்சேருங்கோ என்ன செய்கிறீங்க. நேரம் 10 மணி ஆகிவிட்டது.

அப்பா: ஒப்படை செய்யிறன். நேசன் பாவம்.

அம்மா: என்ன ஒப்படையிங்கோ.

அப்பா: சமூகக் கல்வியில் படம் கீறவேணுமாம். சமயத்தில் வேண்டுதல் வேண்டுமாம்.

அம்மா: சரி கீறுங்கோ, எழுதுங்கோ நானும் றூபிக்கு தமிழ் கட்டுரை எழுதிறன். பாவம் பிள்ளைகள் பகல் எல்லாம் அலைஞ்சு களைச்சுப்போயிற்றுதுகள்.

'சலேசி'

பணம் ஆத்திகம்

''கடவுள் எங்கே இருக்கிறார்'' என்று கேட்டான் நாத்திகன்.

''அவர் உன் நாக்கிலே இருக்கிறார்!'' என்றான் ஆத்திகன்.

''அப்படியென்றால் என் நாக்கையே வெட்டி விடுவேன்!''

''உன் கையிலும் இருக்கிறார்!'' ''என் கையையும் வெட்டி விடுவேன்!''

''உன் தலையிலே இருக்கிறார்!'' ''தலையையே கழற்றிக் கீழே வைத்து விடுவேன்.

''உன் பணப் பெட்டியில் இருக்கிறார்!'' அப்படியென்றால், அவரை நான் பத்திரமாகப் பாதுகாப்பேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியுமா? போட்டி—16

பாதுகாவலன் பத்திரிகையில் (மே 20-ஜூன் 17) வினுவுக் குரிய சரியான விடையைக் கண்டுபிடித்து வினு இலக்கத்தையும் சரியான விடையையும் தபால் அட்டையில் தெளிவாக எழுதி 1-7-88க்கு முன், பாதுகாவலன் அ. பெ. இல.2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். விடையும். பரிசு பெறு பவர் பெயரும், அடுத்த போட்டியும் 15-7-88-ல் வெளி வரும். பரிசு ரூபா 25/=

வினுக்கள்

1. 12வது நூற்றாண்டு நிறைவுகாணும் 2வது நீசெயா பொதுச் பொதுசங்கம் வாதித்த ஒரு விடயத்தைக் குறிப்பிடுக.
2. ஆணுக்குத் துணையாகப் பெண்ணைப்படைத்தார் இறைவன். ஆனல் பெண்ணுக்குத் துணையாக ஆணைப்படைத்தார் என்று தலைகீழாகப் பாடிய கவிஞர் யார்?
3. நற்சமூக நடுநிலையச் செயலர் யார்?
4. இந்தியக் கத்தோலிக்க திருச்சபையிலுள்ள மூன்று வழிபாட்டு முறைகளும் எவை?
5. உலகின் கத்தோலிக்கரின் சனத்தொகை எத்தனை மில்லியன்?
6. கிறிஸ்தவர்களைப்போல் மரியாளை விசுவாசத்திற்கு ஒரு முன் மாதிரியாக மதிக்கிறவர்கள் யார்?

போட்டி - 15. சரியான விடைகள்

1. ஏப். 7. (88) 2. 2-6-81, 3. 16,
4. 13வது திரு. நவம்பர் 14 (87) 5. 30%
6. தென் கொரியாவின் தலைநகரில், 89 ஜப்பசி 5-8 வரை.

சரியான விடை எழுதியோர்:

இளவாலை: லோறன்ஸ் றூபினஸ், பிலிப் ஜோ இருதயராஜ், நீல் பஸ்ரியன் பற்றிக் குணசீலன், மேரிமலர் மரியாம்பிள்ளை, எஸ். மேரி புளோரன்ஸ், பெனடிக்ற் எமில் யோசவ் கிறிஸ்ரி பிரான்சிஸ், பெனடிக்ற் அல்றின் கிறிஸ்ரி, அகஸ்ரின் யூட் அல்வின், யோசவ் விமல்ராஜன், யோசவ் கமலாநந்தன், யே ஜெயகிறிஸ்ரி போல், ஏ பைக்கல் கொலின்ஸ், எஸ். பெனடிக்ற் நித்தியா, அ. யஸ்ரின், அ. சுகந்தி, அ. யோகினி, கௌசி சூசைராஜா, கௌரி சூசைராஜா, மரியகொலஸ் ரிக்கா பிலேந்திரம், அ. றீற்ரு அ. கண்ணன், ச. ஜெயந்தி, அ. சியாமளா, அ. ரமணி, மேனகா சசி, செ. ஜெசி அமல்ராணி எஸ். பெனடிக்ற், அ. நெல்சன்,

மண்டைதீவு: ரீ. ஜேபஸ், செல்வராசா யேசுநேசன், சா. பஸ்ரின், பி. நியூட்டன், ம. லூர்த் மரியசீலி, ம. தயானந்தன், எ. ம்மரி ஆன் கிறேஸ்.

அல்லைப்பிட்டி: அருள் தெய்வேந்திரன்,

பண்டத்தரிப்பு: அ. போல் நியூமன்,

மன்னார்: பொன்கயா கலஸ்ரஸ்,

மாதகல்: நிர்மலா அந்தோனிபிள்ளை, சவரிமுத்து யூடித், சவிரிமுதது பிறஜெம.

யாழ்ப்பாணம்: எல். ஆர். கொன்ஸ்ரன்ரைன், ஷியாமா அகஸ்ரின், ஜீ. ரட்ணராஜா.

நவாலி: சிறில சாந்தி கிறேஸ்,

வங்காலை: செபமாலம்மரி அன்ரனிற்ரு, மரியா சொய்சா

புங்குடுதீவு: அமிர்தராசா ரூபியா, லீனஸ் சகாய ரூபன், கிறிஸ்தாம்பிள்ளை மாலினி, மேரி மாலதி ஞானரத்தினம்.

செம்பியன்பற்று: ம. ஜோய்.

சண்டிலிப்பாய்: அ. யோசப் தவசீலன்,

அரிப்பு: ஜெரும் தம்தயுலெமபட், செ. யேசுதாசன்,

சுன்னாகம்: செலவராணி அமிர்தநாதன.

பரிசுபெறும் நற்பேருளர்:

அ. சுகந்தி, ம்பாயிட்டி, இளவாலை.

புரட்சிகரமான பணிகள் மூன்று மசனெட் ஆண்டகை நினைவு

முத்திப்பேறுபெற்ற அருள்திரு இஞ்ஜின் மசனெட் ஆண்டகை அவர்களை நினைவுகூரும் முக மாக 21. 05. 88 சனிக்கிழமை அன்று பகல் 11 மணிக்கு வங் காலை புனித ஆனுள் ஆலயத் தில் அமலமரித்தியாகிகள் அறு வர் ஒன்றுகூடி கூட்டுத்திருப் பலி ஒப்புக்கொடுத்து - முத்திப் பேறுபெற்ற மசனெட் ஆண்ட கையின் பெயரைக்கொண்டு 3 வது ஆண்டு காணும் பூசைப் பரிசாரகர் சபைக்கு புத்துயிர் ஊட்டி மகிழ்வித்தார்கள். அருட்திரு. பி. பி. பிலிப் அடிக ளார் தலைமையில் கூட்டுப் பூசை நிறைவேற்றப்பட்டது. நாளுட்டான் பங்குத்தந்தை அருட்திரு. நட்சத்திரம் அடிக ளார், 'முத்திப்பேறுபெற்ற மச னெட் ஆண்டகை தம் வாழ் வில் கொண்டிருந்த புரட்சிக ரமான பணிகள் மூன்றை இன்று நமக்கு விட்டுச் சென்றுள்ளார். ஏழைகட்கு நற்செய்தி அறி விப்பு - ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு - அன்னை மரி யாள் மட்டில் அன்பு இவற்றையே இறிஸ்து விரும்பி னர். அமல மரித்தியாகிகளின் பணியாக இது தொடரவேண் டும். உலகம் மலரவேண்டும்' எனத் தம் மறையுரையில் வலி யுறுத்தினர்கள், காணிக்கைப் பவனியில் மசனெட் சபை அங் கத்தவர்களும், துணை அங்கத்த வர்களும் கலந்து சிறப்பித்தார் கள். பூசைமுடிவில் அலங்கரிக் கப்பட்ட முத். மசனெட் ஆண் டகை திருவுரு முன் அமல மரித் தியாகிகளும், 40 பூசைப் பரிசா ரகர்களும் குழுமி நின்று அமல மரித்தியாகிகள் சபையை வாழ்த்திப் பாடிய பாடன் எல் லோர் உள்ளத்தையும் ஈர்த் தது. பங்குத்தந்தை அருட்திரு. அருள்நாதர் அடிகள், வருகை தந்து சிறப்பித்த பங்குத்தந்தை கட்கும், கன்னியர், பங்குமக்கள் அனைவருக்கும் நன்றி கூறுகை யில் 'அமல மரித்தியாகிகளால் மன்னர் மறை மாவட்டமோ, யாழ் மறை மாவட்டமோ, ஏனைய மறை மாவட்டங்களோ விசுவாசத்தில் செழிப்புற்றது என்று பெருமை கொள்வோ மானுல் அதற்குக் காரணம் முத் திப்பேறு பெற்ற மசனெட் ஆண்டகை புனித மரியன்னை மேற்கொண்ட பக்தியும் தணி யாத ஆன்ம வாஞ்சையுமே' என எடுத்துக்காட்டினர்கள். தகவல்:- வி. அ. லெம்பேட்.

விண்ணக வாழ்வின்
2-ம் வருடம் — 5-ம் வருடம்

திருமதி அந்தோனியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
தோற்றம் மறைவு
15-10-1918 19-06-1986

திரு. நீ அந்தோனிப்பிள்ளை (நாகசெட்டி)
தோற்றம் மறைவு
04-04-1908 07-04-1983

எமது அன்புத் தெய்வங்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவின் நினைவில்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பற்றிமா வாசா, நாகசெட்டி கமம்,
சில்லாலை. நாளுட்டான்.

4-ம் வருட நினைவு அஞ்சலி

அன்ரனி பிரகாசி
மலர்வு:- 20-12-1920
உதிர்வு:- 17-6-1984

இவரின் ஆன்ம சாந்திக்காக நெடுந்தீவு புனித யுவானியார் ஆலயத்தில் (25-6-88) இரங்கற்திருப் பலி ஒப்புக் கொடுக்கப் படும். அன்னரது ஆன்ம சாந்திக்காக வேண்டிக் கொள்ளுமாறு அன்பர்களை வேண்டுகின்றோம்.

மகன், மருமகள், பேரப்பிள்ளை, உறவினர்
நெடுந்தீவு-8. A/68

6ஆம் மாத கண்ணீர் அஞ்சலி

அஜந்தி அன்ட்றா
அன்னை மடியில்
01-07-1969
ஆண்டவன் அடியில்
23-12-1987

மகளே எம் மனத்தின் ஒளியே!
மரணம் வாழ்வின் முடிவல்ல
வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா
வான் வீட்டில் இடமளிக்க வேண்டுகிறோம்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். புனித யுவானியார் ஆலயத்தில் 23-6-88 வியாழக்கிழமை மாலை 6-00 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

பிரிவால் வாடும்
அன்பு அப்பா, அம்மா, தங்கை,
உறவினர், நண்பர்

2 ஆண்டு நினைவஞ்சலி

செபஸ்தியான் பிலிப்பு
மலர்வு: உதிர்வு:
15-01-1923 12 06-1986

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் பிரகாசித்து அன் புடனும், பாசத்துடனும் வாழ்ந்து அயராது உழைத்து எங்களை வாழவைத்த அன்பின் தெய்வமே வெள்ளி மறைந் தது போல் மறைந்து எங்களை ஆறுத்துயரில் விட்ட அன்புத் தெய்வமே!

நீங்கள் இறைவனடியில் மறைந்திருந்தாலும் எங்கள் உள்ளத்தில் என்றென்றும் வாழ்ந்திருப்பீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல் லாம் வல்ல இறைவனை என் றென்றும் பிரார்த்திக்கின் றோம். அன்பு மனைவி,
மக்கள், பேரப்பிள்ளைகள்
நெடுந்தீவு மத்தி,
நெடுந்தீவு. A/66

வாழவுதரும இறைவாக்கு

"சமாதானம்!
தொலைவிலிருப்பவனுக்கும்
அருகிலிருப்பவனுக்கும்
சமாதானம்!
அவர்களைக் குணமாக்குவோம்
எனக்குரு ஆண்டவர்.
பொல்லாதவர்களுக்குச்
சமாதானமே இல்லை,
என்கிறார் என கடவுள்."

இசை. 57:20

இறைவாக்கு வாழவுதரும

"எம் கருத்துக்" குறள் தெளிவுரை

பிறர்க்கு உதவி செய்து வாழும் ஒப்புரவைப் போல நல்லனவாகிய வேறு அறப்பகுதிகளைத் தேவருலகத்திலும் இவ் வுலகத்திலும் பெறுதல் இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

குழுக்களுக்கான வேதாகமப் போட்டி

''வேதாகம அறிவை மக்கள் மத்தியில் பரப்பவும், அதன் மூலம் விசுவாசத்தை உறுதிப் படுத்தவும் யாழ். மறைப்பணி நிலையம் அரும்பணி புரிந்து வருகின்றது'' என்று இம்மாதம் 4ஆம் திகதி நடைபெற்ற வேதாகம வினுவிடைப் போட்டிப் பரிசளிப்பு வைபவத்தின்போது, தலைமை வகித்த யாழ். கத்தோலிக்க ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. ஏ. எஸ். அகஸ்ரீன் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் பிரதம அதிதி அருள் திரு. அன்ரன் இராஜநாயகம் அடிகளார் வரவேற்புப் பேசுகையில் அன்னூர் கல்லூரி அதிபராகவும், இளவாலை மறை வட்ட முதல்வராகவும், பணியாற்றிவரும் அதே வேளை கத்தோலிக்க ஆசிரியர்சங்கத்திற்கு நல்கும் ஒத்துழைப்பு மிகப் பாராட்டுக்குரியது என்றார்.

அனைத்து இலங்கை ரீதியில் நடைபெறவுள்ள வேதாகம வினுவிடைப் போட்டியில், தகைமை பெறுவதற்கு முன் னோடியாக யாழ். கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் மறைக்கல்வி நிலையத்தின் அனுசரணையுடன், கிளை மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் ஒழுங்கு செய்து நடத்திய போட்டிகள் அன்று இறுதிக் கட்டத்தை அடைந்தன.

15 கிளைகளிலிருந்து தெரிவான மூன்று பிரிவுகளுக்குமான குழுக்கள், முழு ஆர்வத்துடனும், தகுந்த ஆயத்தத்துடனும் கலந்துகொண்டு, குறிப்பிட்ட வேதாகமப் பகுதிகளில் தமக்குள்ள பரீச்சயத்தின்மூலம் கேட்கப்பட்ட வினுக்களுக்குக் குறிப்பிட்ட நேரத்தில், தகுந்த பதிலளித்தமை யாவரையும் மலைக்கவைத்தது.

போட்டி முடிவுகள்

பிரிவு 1. 12 வயதிற்குட்பட்டோர்

1ஆம் இடம் ... மிருசுவில் ரோ. க. பாடசாலை

2ஆம் இடம் ... இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி

பிரிவு 2. 16 வயதிற்குட்பட்டோர்

1ஆம் இடம் ... புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்

2ஆம் இடம் ... இளவாலை திருக்குடும்ப கன்னியர் மகாவித்தியாலயம்

பிரிவு 3. 20 வயதிற்குட்பட்டோர்

1ஆம் இடம் ... மிருசுவில் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்

2ஆம் இடம் ... கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகாவித்தியாலயம்

ஆயர் பேரவைக் குழப்பம் பெந்தெகோஸ்து அனுபவம்

கோட்டயத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவை இந்திய திருச்சபையின் வாழ்வில் மற்றொரு பெந்தெகோஸ்து அனுபவம் ஆகி விட்டது.

இதில் பெருந்தொகையான ஆயர்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றினர். 40 வீதமான ஆயர்களின் இருப்பிடமான கேரளத்தில் இக்கூட்டம் நடந்தது அதற்கொரு காரணமாகும்.

ழைத்தேய வழிபாட்டு முறை திருச்சபைகளின் தளம் கேரளமே. ழைத்தேய –லத்தீன் வழிபாட்டுமுறை திருச்சபைகளினிடையே இருந்து வரும் இழுபறி காரணமாக அங்குவரும் லத்தீன் வழிபாட்டுமுறை ஆயர்களுக்கு எத்தகைய வரவேற்பு கிடைக்குமோ என்ற அச்சம் நிலவியது.

கூட்டத்தின் போதும் காரசாரமான பேச்சுக்கள் எதிர் பார்க்கப்பட்டன. இருசாராருக்குமிடையிலும் பலத்த கருத்துவேறுபாடு இருந்தது. ழைத்தேய ஆயர்களுக்கு பேரவையில் சில பதவிகள் ஒதுக்குவதுபற்றிய பிரச்சினையே எழுந்திருந்தது. மார்ச் மாதம் பம்பாயில் நடைபெற்ற குழுக் கூட்டத்திலும் எவ்வித முடிவும் எடுக்க முடியவில்லை.

ஆயர்களுக்கு விஜயபுரம், கோட்டயம் ஆகிய இரு பேராலயங்களிலுமே வெவ்வேறுக வரவேற்பு அளிக்கப் பட்டமை கேரளத்திலுள்ள திருச்சபையின் பிளவையே ஆயர்கள் மனதில் ஊர்ஜிதம் செய்வதாக இருந்தது.

கூட்டத்தின்போது இந்த வெவ்வேறு திருச்சபைகளினிடையே ஏற்பட்ட பிரச்சினையின் வரலாறு பற்றிய அறிக்கை வாசிக்கப்பட்டுக் கருத்துகள் பரிமாறப்பட்டன. ஆயர்கள் பல்வேறு மொழிகளில் பேசினர். பதவிகள் ஒவ்வொரு திருச்சபைக்கும் ஒதுக்கப்படவேண்டும் என்று ஒரு சார்பினர் கேட்டனர். தகுதியின்படியே தெரிவு செய்யப் படவேண்டும் என்றனர் மற்றொரு சாரார். மூன்று வெவ் வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டன, வேறுபல திட்டங்களும் ஆயர்களினுல் பிரேரிக்கப்பட்டன. இந்த நிலையில் ஒரு முடிவுக்கு வருவது இயலாததாயிற்று.

ஆகவே அடுத்த அமர்வுக்கு முன் இதனை ஆராய்ந்து மதிப்பீடு செய்யும்வேலை நிரந்தரக் குழுவுக்கு விடப்பட்டது. இதன்பின் ஓர் அழகிய செப வழிபாடு இடம்பெற்றது. திருவல்லா, சங்கனுச்சேரி ஆகிய இடங்களில் வரவேற்புகள் நடந்தன. சிஸ்டர் அல்பொன்ஸா, பிதா சவாரா ஆகியோரின் கல்லறைகள் இருக்கும் தேக்கடி, குட்டநாடு ஆகிய இடங்களுக்கு ஆயர்கள் யாத்திரை சென்றனர். இந்த இடைவேளை அவர்கள் ஒருவரோடொருவர் உறவாடுவதற்கும், சிந்திப்பதற்கும் வழி செய்தது.

நிரந்தரக்குழு பல்வேறு கருத்துக்களையும் ஆராய்ந்து, வேறுபாடுகளைக் களைந்து ஒரு திட்டத்தை வகுத்தது. பொதுச்சபையின் முன் இத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது பின்னர் அது ஒவ்வொரு பகுதியாகச் சபையின் தீர்மானத்துக்கு விடப்பட்டது.

ஒவ்வொரு பந்தியும் வாசிக்கப்பட்டபின் தலைவர் வாக்களிப்புக்கு விட்டபோது எல்லாரும் எல்லாப் பகுதிகளுக்கும் ஆதரவாகவே வாக்களித்தனர். எவரும் எதிராக வாக்களிக்கவில்லை. இந்த வியத்தகு மாறுதல் எல்லாருடைய மனதிற்கும் ஆறுதலாக இருந்தது.

ஒரு புதிய விதமான ஆயர் சபை உதயமாயிற்று. இதில் ஒவ்வொரு வழிபாட்டுமுறைச் சபைக்கு உரிய மதிப்பும், பொறுப்பும் அளிக்கப்பட்டதுடன் பதவிகளில் மூன்று சபையினரும் இருக்கவேண்டுமென்றும் நிரந்தரக் குழுவில் நாலில் ஒரு பங்கு கீழைச் சபைகளுக்கு அளிக்கப்படவேண்டுமென்றும் முடிவாயிற்று.

பெந்தெகோஸ்து நாட்களில் எருசலேமில் நடந்தது போல ஆயர்கள் ஒருவரை ஒருவர் ஒரு புதிய விதத்தில் புரிந்துகொண்டனர், இறைவனின் ஆவி. அவர்களின் உள்ளங்களில் இத்தகைய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தியதனுல் அனைவரும் ஒரே உள்ளத்தோடும் இறையரசுக்கு ஆழ்ந்த அர்ப்பணத்தோடும் திரும்பிச் செல்லக்கூடியதாயிற்று.

ஆயர்கள் மக்கள் தேவைகளை உணர்ந்திருக்க வேண்டும்

'' மக்களை நன்கு நடத்துவதற்கு ஆயர் மக்களின் தேவைகளையும் அறிந்திருப்பது ஒரு ஆயரின் பண்பாகும்'' இவ்வாறு அனைத்திந்திய கத். ஆயர் பேரவையின் முன்னுள் தலைவர், பம்பாய்ப் பேராயர் சைமன் பிமென்ரா ஆயர் பேரவை கூடுவதற்குமுன் 117 ஆயர்களும் சேர்ந்து ஒப்புக் கொடுத்த கூட்டுத்திருப்பலியின் போது கூறினர். ஏப்ரல் 13-ம்திகதிகோட்டயம்கிறிஸ்து ராசா பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்ட இத்திருப்பலி, லத்தின், சீரிய வழிபாட்டு முறைகள் இரண்டும் இணைந்ததாக இருந்தது.

அங்கு குழுமியிருந்த பெருந் தொகையான மக்களைப் பார்த்து '' நாம் இங்கு கூடுகையில் இந்தியத் திருச்சபையின் மட்டில் எமக்குள்ள கடமைகளை உணர்ந்திருக்கிறோம். ஆயர்கள் பல பழைய, புதிய பிரச்சினைகளைக் குறித்து ஆராய இருக்கின்றனர். எல்லாப் பிரச்சினைகளையும் ஆயர்களால் தீர்க்க முடியாது. அதற்குத் திருச்சபையில் அனைவரது ஒத்துழைப்பும் தேவை எனப் பேராயர் சைமன் கூறினர்.

வெள்ளிவிழாக் காணும் அருட்சகோதரி மேசி தி. கு. க.

நாவாந்துறை வாசிகளான காலம் சென்ற அ. செல்வ நாயகம் தம்பதிகளின் புதல்வி அருட்சகோதரி மேசி திருக்குடும்ப கன்னியர் சபையில் துறவற வார்த்தைப்பாடு கொடுத்த 25 ஆண்டு நிறைவு தினத்தை 18. 6. 88 இல் நிறைவு செய்கிறார்.

இவர் கிளிநொச்சி, வவுனியா, பாண்டிவிரிச்சான் ஆகிய இடங்களிலுள்ள தி. கு. கன்னியர் மடங்களில் இறைபணி ஆற்றியுள்ளார். நான்கு வருடங்கள் இந்தியாவில் மறைக்கல்வி பயின்று தற்போது முகலியில் கடமையாற்றி வருகிறார்.

இவருக்கு இறைவனளித்த அருள் வளங்களுக்காக 18. 6. 88 இல் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் நன்றித்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

வைகாசித் திருவிழா

இளவாலை, மாரீசன் கூடலின் மேற்கமைந்த சகாயபுரத்திலுள்ள சதாசகாய அன்னை ஆலயத்தில் 21. 05. 88 சனிக்கிழமை மாலை வைகாசித் திங்கள் வணக்கவிழாத் துவங்கியது. அன்னையின் திருச்சுரூபத்தை அலங்கரித்த கொலுவில் ஏற்றிவைத்து, முதலில் அருட்திரு. கமிலஸ் அடிகளார் விழா முன்னுரையை நிகழ்த்தினர்.

அங்கு அன்றைய வழிபாடுகள் நிறைவெய்தியதும் அலங்கார ஊர்தியில் அன்னையின் திருச்சுரூபத்தை ஏற்றி, அடியார்கள் ஊர்வலமாகப் புனிதகையித்தார் ஆலயத்திற்குக் கொண்டுவந்தனர்.

அவ்வாலய வழிபாடு நிறைவெய்தியதும் அன்னையின் திருச்சுரூப ஊர்வலம் இளவாலைப் போயிட்டி புனித ஸ்தாதுமாதா ஆலயத்தை நோக்கி முன்னேறியது. மூன்று ஆலயங்களையும் சேர்ந்த பீடப்பணியாளர்கள், பாடகர் குழாம் சேந்தாங்குளம் பங்கிற் பயிற்சிபெறும் அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், மூவாலயங்களையும் சேர்ந்த பக்தர்கள் எல்லோரும் கலந்து கொண்டமை கண்கொள்ளாக்காட்சியாயிருந்தது

தகவல்: இராசநாயகம்

புனிதர் பட்டத்துக்கு ஆதரவு

117 வியட்நாம் வேதசாட்சிகளுக்கு ஆனி 19ம் திகதி புனிதர் பட்டம் அளிப்பதற்கு வத்திக்கான் எடுத்துள்ள தீர்மானத்தை வியட்நாமிய ஆயர்கள் தாம் ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளனர். ஆயர்களின் ஒரு விசேட கூட்டத்தில் இத்திருச்சடங்கை பிற்போடுமாறோ, 21 பிரெஞ்சு, ஸ்பானிய – மறைபரப்பாளரின் பெயர்களை விட்டுவிடுமாறோ வத்திக்கானைக் கேட்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது. இவ்விழாவிற் கலந்து கொள்வதற்காக வத்திக்கான் செல்லத் தம்மை அனுமதிக்குமாறு அரசாங்கத்திடம் கேட்பதென்றும் ஆயர்கள் தீர்மானித்தனர்.

வியட்நாம் அரசாங்கமோ இவ்வைபவம் நடைபெறுவதை விரும்பவில்லை. 18-ம், 19-ம் நூற்றாண்டு வேதசாட்சிகள், முக்கியமாகப் பிறநாட்டவர் மேற்கத்திய காலனித்துவ ஆட்சிக்கு உதவியவர்கள் என்றும், பிறநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள வியட்நாமியர் இந்த வைபவத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அரசாங்கத்திற்கு எதிரான பிரசாரம் செய்யக்கூடுமெனவும் கூறி இனைத் தடைசெய்ய முயன்றுள்ளது.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு யூன் மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்